பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

தங்க நகைகளை
கூடிய விலையில் விற்க
நீங்கள் நாடவேண்டிய
சிறந்த ஸ்தாபனம்!
**நியூ ஈழம்
ஜுவல்லரி மாட்**
இல. 423 (247)
கே. கே. எஸ் வீதி,
சிவன் கோவிலடி,
யாழ்ப்பாணம்.
உரிமையாளர்:
இராஜகோபால்
சந்திரன்

# உதயன்


உண்மை – அஞ்சாமை – நடுநிலைமை

விலை ரூ. 1-50

தங்க நகைகளை கூடிய
விலையில் விற்க நீங்கள்
நாட வேண்டிய சிறந்த
ஸ்தாபனம்
**New Ee'am
Jewellery Mart**
No.423,(247)K K S Road.
Sivan Kovi addv. Jaffna.
(சண்முகம் பேவீச் சாலைக்கு
அருகாமையில்)
Prop RAJ KOP L
CHANDRAN

சுடர்: 3 யாழ்ப்பாணம் பிரபவ ஹூ பங்குனி மீ 25 உ. வியாழக்கிழமை ஹிஜ்ரி 1408 ஷஃபான் பிறை 19 (07 04 - 1988) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர்:48



# இராணுவ முகாம்களை அகற்றுமாறு கோரி திருமலைத் தமிழர் மகஜர்

திருகோணமலை, ஏப்ரல் 7

திருகோணமலை மாவட்டத்தில் தமிழ்ப் பகுதிகளில் புதிதாக நிறுவப்பட்ட ஸ்ரீலங்கா இராணுவ முகாம்களை அகற்றுமாறு கோரி மகஜர்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

சம்பந்தப்பட்ட பகுதிகளில் வாழும் தமிழ் மக்களே இந்த மகஜர்களை இந்திய அமைதிப்படை அதிகாரிகளிடம் சமர்ப்பித்துள்ளனர்.

தமிழ்ப் பகுதிகளில் ஸ்ரீலங்கா இராணுவ முகாம்கள் நிறுவப்பட்டுள்ளதால் தமிழ் மக்கள் பல அசௌகரியங்களையும், இன்னல்களையும் அனுபவிக்க வேண்டி உள்ளதாகவும், பாதுகாப்பு சந்தேகத்துக்குரிய நிலைக்கு வந்திருப்பதாகவும், ஆகையால் இந்திய அரசுக்கு நிலைமையை அறிவித்து, இலங்கை அரசிடம் முகாம்களை அகற்ற வலியுறுத்துமாறு அந்த மகஜர்களில் கோரப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் குறிப்பாகத் திருகோணமலையில் சிங்கள மக்களின் பாதுகாப்புக் கருதி ஸ்ரீலங்கா இராணுவம் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருப்பது தெரிந்ததே.

காணி அபிவிருத்தி, மகாவலி அபிவிருத்தி அமைச்சர் திரு. காமினி திஸநாயக்கா சென்ற மாத மத்தியில் புதுடில்லிக்கு விஜயம் செய்ததைத் தொடர்ந்து — கிழக்கு மாகாணத்துக்கு அங்கு ஏற்கனவே முகாம்களில் முடங்கியிருந்தவர்களோடு, மேலதிகமாகவும் இராணுவத்தினர் கடந்த மாதத்தில் அனுப்பப்பட்டனர்.

குறிப்பாகத் திருமலை மாவட்டத்தில் பெரும் எண்ணிக்கையான இராணுவத்தினர் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

சிங்களக் கிராமங்களில் மட்டுமல்லாது, தமிழ் பகுதிகளிலும் புதிதாக சுமார் பத்து முகாம்கள் அமைக்கப்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பணிப்பாளர் மன்சூர் ரணிலுடன் பேச்சு

யாழ்ப்பாணம், ஏப். 7

வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் ஜனாப் எம். எம். மன்சூர் நேற்று கல்வி அமைச்சரைச் சந்தித்தார்.

தடைப்பட்ட ஜீ.சி.ஈ சாதாரண தரப் பரீட்சையை மீண்டும் நடத்துவது பற்றி இருவரும் நீண்ட நேரமாகப் பேச்சு நடத்தியதாக அறியவருகிறது. (ஒ-9)

இராமானுஜம் சப்பல் மூலம் கடந்த செவ்வாய்க்கிழமை காங்கேசன் வந்த அகதிகள் நடேஸ்வரா கல்லூரிக்கு பஸ்ஸில் செல்ல கியூவில் நிற்பதை முதலாவது படத்தில் காணலாம். அகதிகளைப் பொறுப்பேற்று அவர்களுக்கான சகல உதவிகளையும் வழங்கும் ஐ. நா அதிகாரிகள் குழுவினர் இரண்டாவது படத்தில் காணப்படுகின்றனர். மூன்றாவது படத்தில் அமைதிப் படையைச் சேர்ந்த ஒருவர் அகதிகளை "பிஸ்கட்" கொடுத்து வரவேற்பதைக் காணலாம். (ஒ)

படங்கள்: ஜெயம்

## சுபநேரம்

7 - 4 - 1988
பங்குனி 25
வியாழக்கிழமை

சுபநேரம்:
7 37 முதல் 9 07 வரை
ராகுகாலம்:
1.37 முதல் 3 07 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்.

முச்சந்தி முரளி



நிவாரணப் பணிக்கு என்டு குடுக்கிற உந்த வாகனங்கள் நிச்சயமாய் வடக்கு, கிழக்கு வந்து சேருமோ. அல்லது படைகளுக்கு டிரக்குகளாக மாறுமோ ஆருக்குத் தெரியும் ......!

## நகைகளை இதுவரை மீளப் பெறாதவர்கள்

### வங்கியுடன் தொடர்புகொள்ளலாம்

மக்கள் வங்கியில் அடகு வைத்த நகைகளை மீளப் பெற்றுக் கொள்ளாதவர்கள் மீளப் பெற விரும்பின் அடகு வைத்த மக்கள் வங்கிக் கிளையுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தாங்கள் அடகு வைத்த நகைகள் பற்றிய விவரங்களை அடகு வைத்த வங்கி அதிகாரிகளுக்கு தெரிவிக்க வேண்டும்.

அதன் பின்னர் அவர்களுக்கு அடகு நகைகளை குறிப்பிட்ட இடங்களில் பெற்றுக் கொள்வதற்கான திகதியும், இடமும் தெரிவிக்கப்படும்.

குறிப்பிட்ட திகதியில் அடகு வைத்தோர் தமக்கு தெரிவிக்கப்பட்ட வங்கியில் அடகு நகைகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

இதேவேளை நூற்றுக்கு மேற்பட்டோரது நகைகள் மீட்கப்படாமல் இருப்பதாக மக்கள் வங்கியின் உயரதிகாரி ஒருவர் உதயனுக்குத் தகவல் தெரிவித்தார். (ஒ-10)

# கல்முனை வன்செயல்: நாடாளுமன்ற உபகுழு விசாரணை நடத்தும்

கொழும்பு, மார்ச் 7

கல்முனை வன்செயல் சம்பவம் தொடர்பாக விசாரணை ஒன்றை நடத்த நாடாளுமன்ற உபகுழு ஒன்று நியமிக்கப்படும்.

அரசு இந்த முடிவை எடுத்திருப்பதாக நேற்று நாடாளுமன்றத்தில் அறிவிக்கப்பட்டது.

சபை முதல்வரும் பொதுநிர்வாக அமைச்சருமான ரோஜர்மொண்டேகு ஜெயவிக்கிரம இந்த அறிவிப்பை வெளியிட்டார்.

கல்முனைச் சம்பவங்கள்பற்றி நாடாளுமன்றத்தில் விவாதம் நடத்தப்படவேண்டும் என்று அத்தனகல எம். பி. லக்ஷ்மன் ஜெயக்கொடி நேற்றுக் கேள்வி எழுப்பினார்.

அப்போதே அமைச்சர் அரசின் முடிவை அறிவித்தார் [ஒ-எ]

வடக்கு,கிழக்கு நிவாரணப்பணி:

# 23 டிரக்குகளை பிரிட்டன் வழங்கியது

கொழும்பு, ஏப் 7

வடக்கு, கிழக்கு மாகாணங்களின் நிவாரணப் பணிக்கு உதவுமுகமாக பிரிட்டன், இலங்கைக்கு 23 டிரக் வண்டிகளை அன்பளிப்புச் செய்தது.

கொழும்புத் துறைமுக இறங்கு துறையில் வைத்து இந்த வண்டிகளின் சாவிகள் சம்பிரதாயபூர்வமாக அமைச்சர் லயனல் ஜெயதிலகாவிடம் பிரிட்டிஷ் தூதர் டேவிட் கிளாட்ஸ்ரனால் கையளிக்கப்பட்டன.

இவ்வண்டிகளின் பெறுமதி ஒரு கோடி எண்பது லட்சம் ரூபாவாகும். (ஒ-எ)

# ரோகணவை கைதுசெய்ய தென்னிலங்கைக்கு குழு

கொழும்பு ஏப். 7

ஜே. வி பி. தலைவர் ரோஹண விஜேவீராவைக் கைதுசெய்ய விசேட பொலிஸ் குழு ஒன்று தென் இலங்கைக்கு அனுப்பப்பட்டுள்ளது.

இத் தகவலை சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதனிடையில் ஜே. வி பி யின் இராணுவப் பிரிவினரை ஒழித்துவிடும் நடவடிக்கைகளைப் பொலிஸார் எடுத்து வருகின்றனர் என்றும் அதிகாரி தெரிவித்தார்.

இதுவரை ஜே வி பி யினர் நூறுக்கும் மேற்பட்ட அரசியல் கொலைகளைப் புரிந்துள்ளனர். (ஒ-எ)

## இன்று உலக சுகாதார தினம்

கொழும்பு, ஏப். 7

இன்று உலக சுகாதார தினம்

புகைப்பதற்கு எதிரான தினமாகவும் இன்றைய தினத்தை உலக சுகாதார ஸ்தாபனம் பிரகடனப்படுத்தி உள்ளது. (ஒ-எ)

மினிசினிமா உரிமையாளர்களுக்கு அறிவுறுத்தல்:

# ஆபாசப் படம் காட்டினால் மின் இணைப்புத் துண்டிக்கப்படும்

## உபகரணங்களும் பறிமுதல் செய்யப்படும்

### மாநகர ஆணையாளர் சுற்றுநிருபம்

யாழ்ப்பாணம், ஏப் 7

இளம் சமுதாயத்தினரின் மனோ நிலையைப் பாதிக்கக்கூடிய வகையில் ஆபாச படங்களைக் காண்பிக்கும் மினி சினிமாக்களின் மின் இணைப்பு துண்டிக்கப்படுவதுடன் அவர்களின் படம் காண்பிக்கும் உபகரணங்களும் பறிமுதல் செய்யப்படும்.

யாழ். மாநகர ஆணையாளர் சி. வி. கே சிவஞானம் மினி சினிமா உரிமையாளர்களுக்கு அனுப்பி வைத்துள்ள சுற்று நிருபம் ஒன்றில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்தச் சுற்று நிருபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

அண்மைக்கால சூழ்நிலையைச் சாதகம் கப் பயன்படுத்தி பல மினி சினிமாக்கள் மக்களதும் குறிப்பாக இளம் சமுதாயத்தினதும் மனோ நிலையைப் பாதிக்கக்கூடிய படங்களையும், புளூபிலிம் எனப்படும் ஆபா

(6ஆம் பக்கம் பார்க்க)

# ஊர்வலம் சென்றோர் பொலிஸ் மீது சுட்டனர்!

## களனியில் நேற்றுச் சம்பவம்

கொழும்பு, ஏப்,7

நேற்றுக் காலை களனியில் ஊர்வலமாக வந்தவர்கள் ரோந்து சென்ற பொலிஸார்மீது சுட்டனராம்.

இப்படி கொழும்புப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

நேற்றுக் காலை 7 30 மணியளவில் இடம்பெற்ற இச் சம்பவம் பற்றி தெரிவிக்கப்படுவதாவது:-

25 பேர் வரை ஊர்வலமாகச் சென்று கொண்டு இருந்தனர் அப்போது ஜீப்பில பொலிஸார்ரோந்து வந்துகொண்டிருந்தனர்.

அச் சமயம் ஊர்வலத்தில் இருந்து பொலிஸார்

[6ஆம் பக்கம் பார்க்க)

# அகதிகளை அனுப்ப காலக்கெடு இல்லை

## நட்வர்சிங் தகவல்

புதுடில்லி, ஏப் 7

இலங்கைத் தமிழ் அகதிகள் அனைவரையும் திருப்பி அனுப்புவதற்குக் கடைசித் திகதி எதையும், காலக்கெடு எதையும் இந்தியா நிர்ணயிக்கவில்லை.

ஆனால் விரைந்து அனைவரையும் தாயகத்துக்குத் திருப்பி அனுப்பி வைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது — இவ்வாறு இணை அமைச்சர் நட்வர் சிங் லோக்சபையில் நேற்றுத் தெரிவித்தார்.

எழுத்து மூலமான பதிலில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

இலங்கைத் தமிழ் அகதிகள் திரும்பிச் சென்று வாழ்வதற்கான சாதகமான சூழ்நிலை அங்கு நிலவுகின்றது

இதுவரை 17 431 அகதிகள் திரும்பியுள்ளனர்

கடந்த மாதம் 31ஆம் திகதிவரை தமிழ் நாட்டில் ஒருலட்சத்து 6 800 தமிழ் அகதிகள் தங்கியிருந்தனர் — இப்படி பதிலில் கூறப்பட்டது. [ஒ-எ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## ஒன்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

SonyT V 1882 J.V.C 14'' கலர் 7 System கடைக்குத் தேவையான சன்னாடி அலுமாரிகள் விற்பனைக்கு உண்டு. S T L. வீடியோ கிளப் No.3 நவீனசந்தை மேல் மாடி திருநெல்வேலிச் சந்தி யாழ்ப்பாணம். (2412)

புதிய நாஷனல் வீடியோ கமரா மொடல் இல: F. 10 கலர் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு கேரில் தொடர்பு கொள்ளவும் S ஞானசேகரம் அல்லுங்கை தொண்டாவி வாசிகு தொண்டாவில். (2717)

யாழ் மக்களுக்குஅரிய சந்தர்ப்பம் தவற விடாதீர்கள். புதுவருட மலிவு விற்பனை (2-4-88 - 11-4-88 வரை)Shirt, Blouses, Frocks, Baby Frocks மற்றும் நவீன ரெடிமேட் ஆடைகள். Fashion Garments 227 Navalar Road, Jaffna [பெருமாள் கோவில் அருகில்] [2417]

பிறிமா இன ஒரு நாள் புரொயிலர் கோழிக் குஞ்சுகள் 9-4-88 விநியோகிக்கப்படும் முன்கூட்டியே பதிவுசெய்க:S M. காட்வெயர்ஸ் ஸ்ரோர்ஸ் 11/6 ஸ்ரான்லி ரோட். யாழ்ப்பாணம், ஸ்ரீவாணி 802, பலாலி வீதி, திருநெல்வேலி [2316]

### கோழிக்குஞ்சு விநியோகம்

புரொயிலர் குஞ்சுகள், பேட்டுக் குஞ்சுகள், சேவற் குஞ்சுகள், 8 ஆம் திகதி வெள்ளிக்கிழமை விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவு செய்க சற்குணராஜா & பிறதர்ஸ், பிரபபடி லேன், கொக்குவில் (2382)

### தேவை

[1] சமையல் பகுதியை பொறுப்பேற்று நடத்தக் கூடியவர் தேவை வயதெல்லை 30 க்கு மேல் [இருபாலாரும் விண்ணப்பிக்கவும்][2] பிள்ளைகளை பராமரிக்கக் கூடியவர் தேவை வயதெல்லை - 30 க்கு மேல் [இருபாலரும் விண்ணப்பிக்கவும்]

(3) 30 வயது கொண்ட மகளுக்கு ஒருவருக்கு 22 வயதுக்கு மேற்பட்ட மணமகள் தேவை. முக்கியர் இனத்தைச் சேர்ந்தவராய் இருத்தல் வேண்டும் தொடர்பு: புதுவாழ்வு நிலையம், கூளாவடி, ஆனைக்கோட்டை.

கோழிப் பண்ணையையும் முந்திரிகைத் தோட்டத்தையும் பராமரிப்பதற்கு வேலையாட்கள் தேவை. தொடர்பு: சிமாட்டி 122, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (2433)

### மணமகள் தேவை

யாழ்ப்பாண இந்து வேளாள குலத்தைச் சேர்ந்த பெற்றோர் U K. இல் பொறியியலாளராக தொழில் புரியும் (B Sc Engineer) 4 ஆம் வீட்டில் செவ்வாய் இருக்கும் மணமகனுக்கு U K யில் அல்லது கனடாவில் தற்சமயம் இருக்கும் மணமகளை தேடுகின்றனர் முழு விபரங்களுக்கும் விண்ணப்பிக்கவும்: C/o உதயன் 125. யாழ்ப்பாணம். (2416)

### TYPEWRITER

கட்டச்சு இயந்திரங்கள் சிறந்த முறையில் திருத்திக் கொடுக்கப்படும். மற்றும் வாங்கவும் — விற்கவும். Fudo Enterprises, 39/17, 3rd Lane, Power House Road, Jaffna (Near Samy & Co.) (1803)

### சேவை

யாழ் சைனீஸ் றெஸ்ரோறன்ஸ் முதலாம் குறுக்குத்தெரு. தற்போதைய (R R. நல்லையா வீதி). இரவு 7 30 வரை திறந்திருக்கும். இந்த சைனீஸ் றெஸ்ரோறன் ஸுக்கு வேறு கிளைகள் இல்லை. இதுவே வடக்கில் முதலில் உருவாகி முதன்மையாகத் திகழ்கிறது (2241)

### போட்டோ ஸ்ரட்

யாழ்நகரில் தரமான "போட்டோ ஸ்ரட்" பிரதிகளுக்கும் தெளிவான 'ரோனியோ' வேலைகளுக்கும் சிறந்த முறையிலான தமிழ் ஆங்கில 'ரைப்பிங்' வேலைகளுக்கும் என்றும் நம்பிக்கையான நிறுவனம் கிளீன் கட், இல; 239, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

### ரோனியோ போட்டோ ஸ்ரற்

தரம் நாடுவோர் கவருவது நடுமிடம் 'கிளீன் கட்'' தெளிவான போட்டோ ஸ்ரற் பிரதிகளையும் தரமான ரோனியோ பிரதிகளையும் தமிழ். ஆங்கில ரைப்பிங் வேலைகளையும் விரைவாகப் பெற்றுக்கொள்ள ''கிளீன் கட்'' 239, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்'

### நூல்

சமூகக்கல்வி - ஆண்டு 10, 11 தேசப்பட வேலைக்குரிய வழக்கக் குறியீடுகள் உரிய நிறங்களோடு வெளிவந்துள்ளது. க. குணராச (M.A.) தயாரித்தது ஸ்ரீலங்கா புத்தகசாலை பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். [2351]

### காணவில்லை

புங்குடுதீவு சிறீ கணேச மகாவித்தியாலய ஆசிரியர் ஜெசிந்தா சின்னத்தம்பியின் அடையாள அட்டையும் ஒப்படைப்புப் புத்தகமும் கொண்ட கபிலநிற கான்பாக் (Hand Bag) கப்புறுதிக் கட்டிடத்திற்கும் பெரியாஸ்பத்திரிக்கும் இடையில் ஆஸ்பத்திரி வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தோர் உதயன் காரியாலயம். அல்லது 601/1 Hospital Road இல்உள்ள இடத்தில் தயவுசெய்து ஒப்படைக்கவும். நன்றி சன்மானம் வழங்கப்படும். [2287]

தயாநிதி தம்பிராசா என்பவரது தேசிய அடையாள அட்டை யாழ் பல்கலைக்கழக அடையாள அட்டை என்பன புத்தூர் சந்தியில் காணமல்போய்விட்டது. கண்டெடுத்தோர் தயவு செய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். [2436]

### தவறிவிட்டது

491463 600 V அடையாள அட்டையும், D L 116397 இலக்கமுடைய வாகன சாரதி அனுமதிப் புத்தகமும் தொலைந்து விட்டது. கண்டு எடுத்து ஒப்படைப்போருக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும் க இரத்தினசிங்கம், ஐயனார் கோவிலடி, மல்லாகம் [2301]

---

## வேலை வாய்ப்பு
### உடனடிப் பயண ஒழுங்குகள்
## சவுதி அரேபியா

உங்கள் பயண ஒழுங்குகள் செய்வதற்காக, என்னிடம் கடவுச்சீட்டு (Passport) தந்தவர்கள் உடனடியாக என்னை காங்கேசன்துறை காரியாலயத்தில் சந்திக்கவும் கால தாமதத்தால் பிரயாணங்கள் தடைப்படலாம்.

| | | |
|---|---|---|
| 1. | P. தவநேசன | G 0148253 |
| 2- | T. முருகையா | J 0144666 |
| 3- | M பாலகுலேந்திரன் | G 0322292 |
| 4- | M இராசேந்திரன் | H 0307507 |
| 5- | P. சுந்தரலிங்கம் | J 0337726 |
| 6- | V. விக்னேஸ்வரன் | J 0135810 |
| 7- | K. செய்யோன் | J 0110809 |
| 8- | S P முருகதாஸ் | H 0220875 |
| 9- | S. யேசுராசா | F 101017 |
| 10- | M S கணேசலிங்கம் | J 0069054 |
| 11- | A. A போல்ராஜ் | G 0118453 |
| 12- | V. T. செல்வராஜ் | H 0294067 |
| 13- | T அல்விராஜா | G 0002980 |
| 14- | S A பஞ்சமூர்த்தி | H 0309908 |
| 15- | R லம்போதரன் | H 025665 |
| 16- | Y. சிறிகுமார் | J 03491416 |
| 17- | A. S. பகேந்திரன் | H 0358770 |
| 18- | S. தங்கேஸ்வரன் | H 0182536 |
| 19- | M விஜயகுமாரன் | J 0257125 |
| 20- | P. V விரஜகுமார் | J 0261946 |
| 21- | K காரூர்த்தி | H 0291933 |
| 22- | V. S. கிருஷ்ணசாமி | G 0345534 |
| 23- | S. T யேசுதாசன் | H 0194206 |
| 24- | S யோசநாதன் | H 0372287 |
| 25- | P B குமார் | H 0480383 |
| 26- | K நாராயணபிள்ளை | J 0075267 |
| 27- | N. உதயகுமார் | J 0317715 |

உடனடியாக சகல பிரயாண ஒழுங்குகளும் செய்ய இருப்பதால் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்,

**T. இந்திரநாதன்**

# M THREE TRAVELS

சோதி ஒழுங்கை
கல்லூரி வீதி
காங்கேசன்துறை

(பஸ் வழி 769) (2424)

---

# பிரயாண ஒழுங்குகள்
# தொழில் வசதி

## சவூதி அரேபியா (Saudi Arabia)

- சர்வகலாசாலை (University)
- வைத்தியசாலை (Hospital)

1. பூச்சி கட்டுப்பாட்டுப் போதனையாளர் (Pest Control Advisors)
2. பூச்சி கட்டுப்பாட்டாளர் (Pest Controller)
3. பூச்சி கட்டுப்பாட்டு வேலையாள் (Pest Control Labour)
4. வேலை மேற்பார்வையாளர் (Labour Superviser) } பொது வேலை
5. வேலையாள் (Labourer)
6. கூலியாட்கள் (Porters)

★ உணவு பரிசாரக கிளீனேர்ஸ் (Catering Cleaners)

விவசாய – மலேரியா பகுதியில் தற்போது வேலை செய்பவர்க்கு அரிய சந்தர்ப்பம்

வீட்டுப்பணி / பெண்கள் (House Maid)

டுபாய் - குவையிற் - வயது 18க்கு மேல் சவூதி 30 வயதுக்கு மேற்பட்டோர்

உங்கள் மேலதிக விபரங்களுக்கு உடனடியாகத் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:

**I. Indranathan**

# 'M' Three Travels

College Road. Sothy Lane, Kankesanturai
(Bus Route 769) (2424)

---

## ஹர்ஷாவை கொலை செய்தவர் கடற்படை வீரராம்

கொழும்பு, ஏப் 6

ஐ தே க. தலைவர் ஹர்ஷா அபயவர்த்தனாவைக் கொலை செய்ததை லங்கைக் கடற்படையின் வீரர் ஒருவர் ஒப்புக் கொண்டுள்ளார்.

சந்தேக நபர் தற்போது காவலில் வைக்கப்பட்டிருக்கின்றார்.

பொலீஸ் விசாரணையின் போது அவர் இந்த ஒப்புதலை வெளியிட்டார் என்று தெரிவிக்கப்பட்டது (ஒ-எ)

## அலுவலகம் இயங்கவில்லை

யாழ்ப்பாணம், ஏப். 7

நீண்ட நாட்களுக்குப் பின்னர் இயங்கத் தொடங்கிய சங்கானை உதவி அரசாங்க அதிபர் அலுவலகம் கடந்த திங்கட்கிழமை இயங்கவில்லை.

அன்று வட்டுக்கோட்டை தொகுதியின் பல பகுதிகளிலும் உத்தியோகப்பற்றற்ற ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டதே இதற்குக் காரணமாகும்

சங்கானை ப.நோ கூ சங்கத் தலைமையகமும் அன்று திறக்கப்படவில்லை. [ஒ]

---

யாழ்நகரில் புதியதோர் ஜவுளி உலகம்

# சிந்து பைரவி
# SINTHU BHIRAVI



- திருமண பட்டுப்புடவைகள்
- இறக்குமதி செய்யப்பட்டசாறி சமுத்திரத்தில்

★ எமரல்ட் குயின்
★ சித்திரா
★ ருவிங்கிள் குவீன்
★ சுப்பர் மைக்ரோ
★ சிங்கோ ஸ்ரார் கொலெக்ஷன்
★ சோனியா கொலெக்ஷன்
★ லேடி கமில்டன்
★ சாறி குயின்
★ பூணம்
★ நதியா கொலெக்ஷன்
★ பான்ஸி சற்றின்
★ கோயிங் எவே
★ கிறியோ பெற்ரு
★ தீபா ★ அமலா

ஆண், பெண்களுக்குரிய அனைத்து மில் ஜவுளிகளும் நிதான விலையில் கிடைக்கும் புதியதோர் நிறுவனம்

# சிந்து பைரவி

**No 48, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்**

---

# S. T. C. A.
# Certificate

**பரவலாக அங்கீகரிக்கப்பட்டு வருவதற்கு காரணங்கள்**

1. 22 வருடங்களாக இயங்கிவரும் கல்வி நிறுவனம்.
2. அரசாங்கத்தாலும், யாழ். மாநகர சபையாலும் பதிவு செய்யப்பட்டது.
3. லண்டன் பிற்மன் பரீட்சைகள் நிறுவனத்தால் பரீட்சை நிலையமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.
4. திட்ட அமுலாக்கல் அமைச்சினாலும் இளைஞர் விவகார வேலைவாய்ப்பு அமைச்சினாலும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது

தமிழ் / ஆங்கில சுருக்கெழுத்து, தட்டெழுத்து ஆகியவற்றை வேறெங்காவது பயின்ற பிற்பாடு S. T. C A. தேர்வுக்கும் தோற்றி ஒரு தராதரப் பத்திரத்தை பெறுவதில் நியாயம் உண்டு

37 (149), சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம்.

(வடக்கில் வேறு நிறுவனங்கள் எமக்கில்லை) (2434)

---

## 179 வது நாள் நினைவஞ்சலி

**இராமநாதன் திருபாகரன் (திருபா)**
(1 ஆம் வருட விஞ்ஞானபீட மாணவன் யாழ் பல்கலைக்கழகம்)

அன்னையின் மடியில்: 14 - 8 - 1965
அந்நியர் பிடியில்: 12 - 10 - 1987

நயினை மண்ணிலே சிறந்த
நடுவ காட்டிலே மலர்ந்து
நாளொரு வண்ணமாய் வளர்ந்து
நல்ல கல்வியில் உயர்ந்து
பட்டம் பெற்றிட வென்று
பல்கலைக் கழகம் சென்று
படிப்பிலே வித்தகன் என்று
பலபேர் போற்றிட நின்றாய்!
வங்கக் கடலது தாண்டி
வன்செயல் அடக்கிட வென்று
எங்களின் மண்ணில் புகுந்து
இமைகளே கண்களைக் குத்த
அங்கம் பிளந்து இரத்தம்
ஆறாய்ப் பாய்ந்து ஓட
எங்களை ஏங்கிட விட்டு
எங்கே சென்றாய் திருபா!
உங்களின் ஆத்மா சாந்திக்காய்
உமையவள் பாதம் வேண்டுகிறோம்!!

தங்களின் பிரிவால் தவியாய்த் தவிக்கும்
பெற்றோர், உடன்பிறந்தோர், உற்றார், உறவினர்கள், நண்பர்கள்.

நயினாதீவு 5.
7 4 1988. (2431)

---

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு:- 10-05-1951 உதிர்வு:- 10-04-1985

அமரர்
**பாக்கியநாதன் இலங்கநாதன்**
(றேடியோ இயக்குநர் பொலீஸ் திணைக்களம் யாழ்ப்பாணம் )

அன்பின் திருவுருவாய் அமைதியின் சின்னமாய் பாசத்தின் பிறப்பிடமாய் பண்பின் இருப்பிடமாய் பார் போற்றும் சமூகத்தில பச்சுவமாய் வாழும் வேளை உள்நாட்டு பூசலினால் உருவான போர்க்களத்தில் தன்மனைவி தன்பிள்ளை தன் சுற்றம் தனைமறந்து எந்நாளும் அழியாத ஏக்கத்தை எமக்களித்து இறைவனடி சேர்ந்து விட்டீர். உங்கள் ஆத்மா சாந்தியடைய

மனைவி, மக்கள், தந்தை, உற்றார், உறவினர், நண்பர்கள் ஆற்றிடும் அஞ்சலியை ஏற்றிடுவீர்
நன்றி

வட்டு மேற்கு,
வட்டுக்கோட்டை. (2760)

---

## 6 ஆம் மாத அந்தியேட்டியும் வீட்டுக்கிரித்தியங்களும்



தோற்றம்: 1 - 4 - 1934

மறைவு: 12 - 10 - 1987

(அக்கா)

கொக்குவில் கிழக்கு பொற் பதி வீதியில் அகாலமரணமடைந்த

**திருமதி. சிவபாக்கியம் இராசதுரை**

திரு செ. இராசதுரை, மாங்குளம் புகையிரத அதிபராயிருந்து இளைப்பாறியவர், அவர்களின் அன்பு மனைவியும் திருவாளர்கள் இராசேந்திரன், ஜெயந்திரன். குணேந்திரன், செல்விகள். காந்தினி, நிலாணி, ஆகியோரின் அன்புத் தாயாரும், திருமதி. கொறீன் இராசேந்திரனின் அன்பு மாமியாரும் ஆகிய சிவபாக்கியத்தின் அந்தியேட்டியும் வீட்டுகிரியைகளும் 7 - 4 - 88 இன்று வியாழக்கிழமை பொற்பதி வீதியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகிறோம்.

செ. பழனித்துரை

பொற்பதி வீதி,
கொக்குவில். (2751)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புங்குடுதீவில் சட்ட விரோதமான மின் இணைப்பு துண்டிப்பு

ஊர்காவற்றுறை, ஏப் 7

புங்குடுதீவின் பலபகுதிகளிலும் காணப்பட்ட ஏராளமான சட்ட விரோத மின் இணைப்புக்கள் துண்டிக்கப்பட்டன.

இதற்காக பாவிக்கப்பட்ட பல ஆயிரம் ரூபா பெறுமதியானவயர்களும் ஏனைய மின் இணைப்பு சாதனங்களும் பறிமுதல் செய்யப்பட்டன.

வேலணை பிராந்திய மின்சார அத்தியட்சகர் திரு. மார்க்கண்டு விஜயசிறி தலைமையில் சென்ற மின்சாரசபை ஊழியர்கள் கொண்ட குழு ஒன்று இத் துண்டிப்பு வேலைகளை மேற்கொண்டது.

புங்குடுதீவுப் பகுதியில் காணப்பட்ட இவ்வாறான பல சட்டவிரோத மின் இணைப்புகளால் தீவுப் பகுதி முழுவதற்குமே மின்சாரம் தடைப்பட காரணமாக அமைந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (இ-16)


# மீண்டும்

## எமது சேவை

# Printo Style System

முறையில் எமது போட்டோ கொப்பி சேவை ஆரம்பமாகி உள்ளது.

அலுவலகங்கள், பாடசாலை மாணவர்கள் நன்மை கருதி ஏப்பிரல் 4ஆம்திகதி தொடக்கம் காலை 7 மணி முதல் மாலை 6மணி வரை சேவை இடம் பெறும்.

குறிப்பு: அதிக கொப்பிகள் எடுப்பவர்களுக்கு அதிவிசேஷ கழிவுகள் வழங்கப்படும்.

விபரங்களுக்கு:

**சண்முகம் றேட்ஸ்**
(185) 65, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

(2363)



## சேக்கிள் சென்ரர்

### சங்கானை

# 4 ஆம் ஆண்டு நிறைவு மலர்

**உங்கள் ஆதரவே**
**எங்கள் மனநிறைவு**

கடந்த நாலாண்டு காலமாக எத்தனையோ இன்னல்கள், இடையூறுகள் மத்தியிலும் தளரா நிலையில் எமது ஸ்தாபனம் வளர்ச்சியடையவும், எமது சேவைகள் தொடர்ந்து பெருகவும் எமக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்த அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள், அனைவரையும் அன்புடனும், நன்றியுடனும் எமது ஸ்தாபனம் தொடர்ந்து இருகரம் நீட்டி வருக வருக என வரவேற்கின்றது.

தொடரப்போகும் எமது 5ஆம் ஆண்டில் அன்பர்கள். ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரும் திருப்தியுடன் குதூகலமாகப் புத்தாண்டைக் கொண்டாடி மகிழவும், தேவைகளை நிறைவு செய்யவும் தொடர்ந்து சேவை வழங்கக் காத்திருக்கின்றது எமது சேக்கிள் சென்ரர்

புதிய / பழைய தமிழ், ஆங்கிலத் திரைப் படங்களின் சிறந்த வீடியோப் பிரதிகளுக்கும் பாடல்கள் யாவும் இசைத் தட்டிலிருந்து ஒலிப்பதிவு செய்வதற்கும், "பாட்டா" பாதணிகளுக்கும், அழகிய எவர்சில்வர் அன்பளிப்புப் பொருட்களுக்கும், றேந்தை, பல வர்ண நூல்களும் மற்றும் தையல் பொருட்கள், தலையலங்காரப் பொருட்களைப் பெற்றுக் கொள்வதற்கும் என்றும் நீங்கள் மறவாது நாடவேண்டிய ஸ்தாபனம்:

**CIRCLE CENTRE**
**Main Street, Chankanai**
**சேக்கிள் சென்றர்**
**பிரதான வீதி, சங்கானை.**

குறிப்பு:- எமது ஆண்டு நிறைவையொட்டி இன்று மட்டும் எமது வாடிக்கையாளர்களுக்கு வீடியோப் பிரதிகள் அரைக் கட்டணமாக வாடகைக்குத் தரப்படும். மற்றும் பொருட்கள் யாவும் 7 ஆம் திகதி தொடக்கம் 13ஆம் திகதி வரை 5% - 10% மலிவு விற்பனையில் வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகின்றோம். (2303)


# கண்ணைக்கட்டிக்காட்டில் விட்ட நிலையில் ஓர் இளைஞர் கூட்டம்

## வேலையின்றி அல்லலுறும் வெளிவாரிப் பட்டதாரிகள்

எமது நாட்டின் இன்றைய நிலைக்கான அடிப்படைக் காரணங்கள் பலவாக இருக்கலாம்.

ஆனல் தலையாய காரணம் எது என்று நாம் ஆராயப் புகுந்தால், கடந்த காலத்திலிருந்து இன்றுவரை உயர்கல்வி வழங்குதலிலும் உத்தியோக வாய்ப்பளித்தலிலும் ஒரு சாராருக்கு எப்பொழுதும் பாரபட்சம் காட்டப்பட்டுள்ளது என்று தயங்காது கூறலாம்.

இறுதியாக இந்தப் பாரபட்சத்துக்கு உள்ளாகி அவலப்படுவோர் வெளிவாரி மாணவர்களாகப் பரீட்சைக்குத் தோற்றிச் சித்தியடைந்தும் ஆசிரிய நியமனம் வழங்கப்படாத பட்டதாரிகளாவர்.

தரப்படுத்தல் காரணமாகப் பல்கலைக்கழக நுழைவனுமதி பெறாத மாணவர்கள் எண்ணிக்கை ஆண்டு தோறும் அதிகரித்த வண்ணம் இருக்கின்றது.

நந்தனர்கள் போலப் பல்கலைக்கழக நுழைவாயில்களிலேயே தடுத்து நிறுத்தப்படும் இந்தத் துரதிருஷ்டசாலிகளில் பலர் அதனோடு தமது படிப்புக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு வேலையில்லாப் பட்டாளத்தில் சேர்ந்து கொள்கின்றனர்.

தமக்கு ஏற்படும் விரக்தி காரணமாகச் சமுதாயத்திற்கும் ஏன் தமக்குமே பிரச்சினைகளாகி விடுகின்றனர்.

ஒரு சிலரோ தமக்கு ஏற்படும் தோல்வியை வினைவில் ஜீரணித்துக் கொண்டு தொடர்ந்து கல்வியில் ஈடுபடுகின்றனர். அரசாங்கமும் இவர்களில் அநுதாபம் கொண்டு வெளிவாரியாகக் கற்றுப் பட்டம் பெற வாய்ப்புத் தருகின்றது. இதற்கெனவே பல்கலைக்கழகத் துணைப்பிரிவாக வெளிவாரிப் பட்டப் படிப்பு நிறுவனத்தையும் உருவாக்கியுள்ளது.

### பெரும் சவால்

இந்நிறுவனத்திலே கலை, விஞ்ஞான, வர்த்தகக் கலைமாணிப் பட்டங்களுக்கெனப் பதிவு செய்து கொண்டு பல்கலைக்கழக நுழைவனுமதி பெறாதவர்கள் பலரும் தமது கல்வியை மும்முரமாகத் தொடர்கின்றனர். இவ்வாறு தொடர்ந்து கற்பது என்பது இவர்களைப் பொறுத்தவரையிலே பெருஞ்சவாலாகவே இருந்து வருகின்றது.

பல்கலைக் கழகத்தினுள் நுழைந்து விடும் திர்ஷ்டசாலிகளுக்குப் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் ஆகியோரின் விரிவுரைகளும், வழிகாட்டல்களும் கிடைக்கின்றன.

பல்கலைக்கழக நூலகம் இவர்களுக்காகத் தன் வாயில்களை எப்பொழுதும் திறந்து வைத்திருக்கின்றது. இலவச உயர் கல்வி வாய்ப்போடு பல்கலைக்கழக பானியக் குழுவிடமிருந்து கடனுதவி, மகாபொலப் புலமைப் பரிசில்கள் என்பன கிடைக்கவும் வழி செய்யப்பட்டிருப்பதால் பொருளாதாரப் பிரச்சினை இன்றி உள்வாரி மாணவர்கள் மன அமைதியுடன் கற்கவும் தமது முயற்சிக்கும் திறமைக்கும் ஏற்பத் தேர்ச்சி பெறவும் வாய்ப்புகள் கிடைக்கின்றன.

### கண்ணைக் கட்டி காட்டில் விட்ட நிலை

ஆனல் வெளிவாரிப் பட்டதாரி மாணவர்களுக்கோ இந்த வசதிகள் எவையுமே இல்லை. கண்ணைக் கட்டி காட்டில் விட்டது போன்ற நிலை.

இருப்பினும் எப்படியாவது பட்டதாரிகளாகி விட வேண்டும் என்ற முனைப்புக் குறையாத நிலையில் தத்தமக்குரிய பாடத்திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு கற்பதற்கு இவர்கள் பலத்த முயற்சியில் ஈடுபட வேண்டியதாகின்றது.

வெளிவாரிப் பட்டப் படிப்புக் கல்லூரிகளிலே சேர்ந்து, விரிவுரையாளருக்குக் கற்பித்தல் கட்டணம் செலுத்தி, நாள்தோறுமோ, கிழமை இறுதிகளிலோ தம்வதிவிடங்களிலிருந்து பல மைல் தொலைவுகள் பயணம் செய்து பலத்த சிரமங்களுக்கிடையே இவர்கள் தமது கல்வியைத் தொடர்கிறார்கள்.

ஓரிரு தடவைகள் சித்தி எய்தாவிட்டாலும் தங்கள் முயற்சியைக் கைவிடாது. தொடர்ந்து பரீட்சைக்குத் தோற்றுகின்றார்கள்; இறுதியிலே எவ்வாறு சித்தியடைந்து நிம்மதிப் பெருமூச்சும் விடுகின்றார்கள். பாவம்! இந்த நிம்மதிப் பெருமூச்சின் காலம் மிகக் குறுகியதே.

### வேலை இல்லாப் பிரச்சினை

வெளிவாரிப் பட்டதாரி மாணவர்களில் பலர் எவ்வித வேலைகளிலும் அமர்ந்திராதவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும் "எவ்வித கஷ்டப்பட்டாவது படித்துப் பட்டம் பெற்றால் வேலை வாய்ப்புக் கிடைக்கும். குடும்பத்திற்கு பாரமாயிராது நாமும் ஏதோ உழைத்து மனிதராய் வாழலாம்" என்ற ஊறிகோளே இவர்களைக் கற்பதற்குத் தூண்டிய தூண்டுகோலாகும்.

ஆனல் ஜதார்த்த நிலையோ இவர்களின் நினைவுக்கு எதிராகவே இருந்து வருகின்றது- 'கைக்கெட்டியும் வாய்க்கெட்டாதது போலப்' பட்டம் பெற்றும் தொடர்ந்து வேலையில்லாத் திண்டாட்டத்திலே சிக்கி இவர்கள் அல்லற்பட வேண்டியதாகின்றது.

நான்கள், மாதங்கள் அல்ல, வருடங்கள் பலவாக வேலையின்றி அல்லற்படுவோர் அநேகர்!

இருப்பினும் 1984 வரை வெளிவாரிப்பட்டதாரிசளானோர், இளைஞர் விவகார வேலை வாய்ப்பமைப்பின் கீழ் இயங்கும் இளைஞர் வேலை நியமனத் திட்டப் பிரிவிலே தம்மைப் பதிவு செய்து கொண்டு சில ஆண்டுகளின் பின்னுவது ஆசிரிய நியமனம் போன்றவற்றை அந்தந்த அமைச்சுக்களின் வாயலாகப் பெற வாய்ப்பிருந்தது.

பெரும்பாலும் கல்வி அமைச்சால் வழங்கப்படும் ஆசிரிய நியமனங்கள் தாம் கிடைத்து வந்தன. 1984 வரை இந்திய மனங்கள் வெளிவாரி உள்வாரி என்ற வேறுபாடின்றி வழங்கப்பட்டன.

1985 இல் பட்டம் பெற்று மேற்குறித்த வேலை நியமனத்திட்டம் பிரிவால் பதிவு செய்யப்பட்டு இரு நேர்முகப் பரீட்சைகளுக்கும் (கொழும்பு, வவுனியா) தோற்றிய வெளிவாரிப் பட்டதாரிகளுக்கு உள்வாரிப்பட்டதாரிகளைப் போன்று ஆசிரிய முற்பயிற்சியோ நியமனமோ இன்றுவரை வழங்கப்படவில்லை.

### கண்ணீர் விட்டு வளர்த்த பட்டம்

பெரும் பொருள் செலவையும் சிரமங்களையும் மேற்கொண்டு நாட்டின் நிலைமைகளுக்கேற்ப பரீட்சை நிலையங்கள் மாறும்பொழுதெல்லாம் கொழும்புக்கும் பேராதனைக்கும் பல இடர்ப்பாடுகளுக்கும் இடையிலே சென்று பரீட்சைக்குத் தோற்றி கண்ணீர் விட்டே வளர்த்தெடுத்த பட்டம் என்ற மாமணியால் எவ்வித பயனையும் பெறாது தாம் பெற்றது மாமணியா அல்லது மண்ணாங்கட்டியா என்ற ஐயப்பாட்டில் தடுமாறும் நிலையில் ஆசிரிய நியமனம் கிட்டாது வருந்தும் வெளிவாரிப் பட்டதாரிகளுக்கு விமோசனம் என்று கிடைக்குமோ?

1985 இல் சித்திபெற்றவர்கள் நிலை இது என்றால் 1986 இல் சித்தி பெற்ற வெளிவாரிப் பட்டதாரிகளோ இளைஞர் வேலை வாய்ப்புத் திட்டப் பிரிவால் பதிவு செய்யப்படாது புறக்கணிக்கப் பட்டுள்ளனர்.

அவ்வாறானல் அவர்களுக்கு அண்மைக்காலத்தில் எவ்வித விமோசனமும் கிட்டப்போவதில்லை என்பது தெட்டத்தெளிவாகிவிட்டது. வெளிவாரியாகத் தோற்றிப் பட்டம் பெற ஊக்கிய பின்பு, வேலைவாய்ப்பில் புறக்கணிக்கப்படுவதை எவ்விதத்திலும் எவராலும் நியாயப்படுத்த முடியாது என்பது வெள்ளிடை மலை.

'எல்லாரும் இந்நாட்டு மன்னராய் இல்லாவிட்டாலும் 'எல்லாரும் இந்நாட்டின் உரிமைக் குடிகள்' என்பதையாவது இலட்சிய ஜனநாயகவாதிகள் கருத்தில் கொள்வார்களானல், இத்தகைய பாரபட்சத்திற்கு இடமில்லாது போய் விடும்.

இவ்வுண்மைகளைச் சம்பந்தப்பட்டோருக்கு வலியுறுத்தி எடுத்துரைக்கவும் வெளிவாரிப் பட்டதாரிகளின் கோரிக்கைகளை வென்றெடுக்கவும் 13-02 88 சனிக்கிழமையன்று நல்லூர் இந்து விடுதியில் வெளிவாரிப் பட்டதாரிகள் சங்கம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது-

வேலை கிடைக்காமல் பாதிப்படைந்துள்ள வெளிவாரிப் பட்டதாரிகள் (1985) வேலைப் பதிவு மறுக்கப்பட்டவர்கள் (1986) யாவரும் இச்சங்கத்திலே அங்கத்துவம் பெற்று எமது குறிக்கோள் நிறைவேற உழைக்க முன்வருமாறு வெளிவாரிப் பட்டதாரிகள் சங்கத் தலைவர்' என்ற முறையிலே வேண்டுகோள் விடுக்கிறேன்,

'அடிக்கு மேல் அடி அடித்தால் அம்மியும் நகரும் 'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே'.

(இ)

**ந. விஜயன்,**
தலைவர், வெளிவாரிப் பட்டதாரிகள் சங்கம்.

## சிங்களத் தீவிரவாதிகள் எதிர்க் கட்சிகளினுள் ஊடுருவல்எனத்தகவல்

கொழும்பு. ஏப். 7

தென்இலங்கைத் தீவிரவாதிகள் எதிர்க் கட்சிகளினுள் ஊடுருவல் செய்திருப்பதாகக் கொழும்புப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

பல்கலைக் கழகங்களில் இடம்பெற்ற கலவரங்கள் தொடர்பாகக் கைது செய்யப்பட்ட ஒரு சந்தேக நபர், எதிர்க்கட்சி ஒன்றில் நீண்ட காலமாகப் பணிபுரிந்து வந்தார் என்று தெரியவந்துள்ளதாம்.

அந்தக் கட்சிகளுள்இருந்துகொண்டு, தீவிரவாத இயக்கத்தின் நலன்களை அச்சந்தேக நபர் கவனித்து வந்தார் என்று புலன் விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (ஓ-எ)

## வீடுகளை இழந்தோருக்கு ரூபா 3 ஆயிரம்

வலி.வடக்கில்இராணுவ நடவடிக்கையால் வீடுகளை இழந்த 329 குடும்பங்கள் தற்காலிக வீடுகளை அமைக்க அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் தலா மூவாயிரம் ரூபா வீதம் நிதியுதவி செய்ய முன்வந்துள்ளது.

வலி வடக்கு பிரஜைகள்குழுஒன்றியம்விடுத்த வேண்டுகோளை அடுத்து அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் இந்த நிதியுதவியை வழங்க முடிவு செய்துள்ளது. இ-68

## தெரிவான 9 பேர்

யாழ்-பல்கலைக்கழகத்தில் நடைபெறும் "கல்வி டிப்ளோமா 1987/1988" முழு நேரப் பாடநெறிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ள 9 பேரின் விபரம் வருமாறு:-

1 திரு. கலாமணி உடுவில், 2 திரு. பி அமலசிங்கம் கோண்டாவில், 3. திரு. ஏ. கணேந்திரராசா கொக்குவில், 4. திருமதி ஏ. பிரபாகரன் யாழ்ப்பாணம், 5. திரு. எம். பிரபாகரன் யாழ்ப்பாணம், 6. திரு. எம். சிவசுப்பிரமணியம் மீசாலை, 7. செல்வி எம். சோமசுந்தரம் யாழ்ப்பாணம் 8 திருமதி யூ. ஸ்ரீஸ்கந்தராசா நீர்வேலி, 9. திரு [illegible] விஜயசுந்தரம் [illegible] இணுவில்

(இ-11)


## முருகன் அடியார்களுக்கு ஒரு வேண்டுகோள்

செல்வச்சந்நிதி அடியார் மடத்தின் பெயரைச் சொல்லிப் பலர் பணமும், பொருள்களும் சேகரிப்பதாக அறிகின்றோம். அன்னதானத்துக்குப் பணமோ, பொருள்களோ கொடுக்கும் அன்பர்கள் தயவுசெய்து மடத்திலே சேர்ப்பிக்குமாறும், மற்றையோரிடம் கொடுத்து ஏமாற வேண்டாமெனவும் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

ம.வெங்கடாசலபிள்ளை
நிர்வாகி

(2740)



### அகில இலங்கை

## பரஸ்பர சகாயநிதிச் சங்கம், லிமிற்றெட்

தபாற்கந்தோரடி,
வட்டுக்கோட்டை.

ஸ்தாபிதம் 1957

பதிவு இல. S 154/26-3-64

**அங்கத்தவர்கள் அனைவருக்கும் மங்களப் புத்தாண்டு வாழ்த்துக்கள் உரித்தாகுக.**

கடந்த 31 வருடங்களாக மக்கள் சேவையே மகேசன் சேவையென அரும்பணியாற்றிவரும் அங்கத்தவர்களின் சன்னுன பொக்கிஷம் போன்ற இச்சங்கம் வரும் 13-4-88 புதன்கிழமை புத்தாண்டு தினத்தன்று வழமைபோல் புதுவருடக் கொடுக்கல் வாங்கல் செய்வதற்கு அதன் ஆயிரமாயிரம் அங்கத்தவர்களையும் அழைக்கின்றது.

அன்று சங்கக் காரியாலயத்தில் பணம் வைப்பிலிடுவோருக்கு சிற்றுண்டி, பலகாரங்கள் வழங்கப்படும்.

தலைவரிமிருந்து புதுவருடக் கைவிசேஷம் பெற்றுச் செல்லுமாறு வேண்டுகின்றோம்.

தூர இடங்களில் வசிப்போர் 12ஆம் திகதி காரியாலயத்திற்கு வந்து ஸ்த பணம் சம்பந்தமாக உங்கள் சங்கத் தலைவருடன் கலந்துரையாடிக் கருத்துப் பரிமாறல் செய்வதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன,

**அங்கத்தவர்களுக்கு மட்டும் கிடைக்கும் நன்மைகள்**

பூப்பெய்தல் — நன்கொடை     திருமணம் — நன்கொடை
இறுதிக் காலம் — நன்கொடை     பொறுப்புக் கடன்கள்
5 வருட நன்கொடை வைப்புத்திட்டம், சேமிப்புக் கணக்குகள்.

பிரவேசம் ரூபா 50-00 மாதாந்தம் ரூபா 20-00

நன்கொடைகள் உரிமைகள் பெற 1 வருட அங்கத்துவம் பூர்த்தி செய்ய வேண்டும்.

அங்கத்துவ கால எல்லை (முதிர்ச்சி) 30 வருடங்கள்

வடக்கு கிழக்கு மாகாணங்கள் முழுவதும் பரந்த சேவை

**திரண்டு வாருங்கள்!     ஆயிரமாயிரமாகச் சேருங்கள்!!**

எங்கும் கிடைக்க வொண்ணு நன்மைகளைப் பெறுங்கள்!!!

**வாழ்க அகில இலங்கை பரஸ்பர சகாய நிதிச் சங்கம்!**

வளர்க அங்கத்தவர்களின் ஒற்றுமை!

**S. K. ஆனந்தராசா**
முகாமையாளர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நிலைக்குக் கூட்டணியும் முக்கிய பொறுப்பாகும்

## கருத்தரங்கில் உரை

வடமராட்சி, ஏப் 7

இன்றைய தமிழ் மக்களின் தாழ்வு நிலைக்கு தமிழர் விடுதலைக் கூட்டணியினரும் முக்கிய பொறுப்பு.

தமிழ் ஈழம் மக்கள் மன்றத் தலைவர் திரு க. சிவானந்தசுந்தரம் இப்படிக் கூறினார்.

பருத்தித்துறை சர்வ வர்த்தினி கலாமண்டபத்தில் மேற்படி மன்றத்தினால் இலங்கை — இந்திய உடன்பாடு பற்றிய கருத்தரங்கு ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

கருத்தரங்கில் திரு. சிவானந்தசுந்தரம் தெரிவித்ததாவது.

தமிழ் மக்களின் பூரண சுதந்திரத்தை பெறுவதற்கும் நியாய பூர்வமான கோரிக்கைகளை அடைவதற்கும் ஆயிரக்கணக்கானோர் உயிர்த்தியாகம் செய்துள்ளனர். அவர்களின் தியாகங்களை நாம் வீணாக்கக்கூடாது.

ஒப்பந்தம் ஒன்று கூறுகின்றது, இலங்கை நாடாளுமன்றம் இன்னொன்று கூறுகின்றது.

ஒப்பந்தத்தை நிறைவேற்ற முடியாது திண்டாடும் ரசுகள் பொது மக்களையும் போராளிகளையும் ஒப்பந்தத்தை ஏற்றுக் கொள்ளுமாறு நிர்பந்திக்கின்றன.

இக்கால் அத்துமீறிய சிங்களக் குடியேற்றங்களை இலங்கை அரசு நடத்தி வருகின்றது இந்நிலையில் நாம் எப்படி ஒப்பந்தத்தை ஏற்றுக் கொள்வது?

ஆகவே செய்து கொண்ட ஒப்பந்தத்தை நியாயபூர்வமானமுறைப்படி நிறைவேற்றிய பின் போராளிகளையும் பொது மக்களையும் அதனை ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்வது நியாயமானது

இப்படி அவர் கூறினார்.

திரு ச. தேவதாசன் தலைமையில் நடைபெற்ற இக் கருத்தரங்கில் அநேக மக்கள் கலந்து கொண்டனர்.

(இ-160)

# மீண்டும்ஜனாதிபதியாக வர ஜெயவர்த்தன நிபந்தனை!

கொழும்பு, ஏப். 7

மூன்றாவது முறை ஜனாதிபதியாக வர திரு. ஜே. ஆர் ஜெயவர்த்தன சில நிபந்தனைகளை விதித்திருக்கின்றார் என்று அரசியல் வட்டாரங்களில் கூறப்படுகின்றது.

அந்த நிபந்தனைகள் வருமாறு:-

★ தற்போதைய அரசமைப்புச் சட்டம் மூன்றாவது முறையாக போட்டியிட அனுமதிக்க வேண்டும்.

★ அல்லது சர்வசன வாக்கெடுப்பு நடத்தாத விதத்தில் அரசமைப்புக்கு திருத்தம் கொண்டு வந்து மூன்றாவது முறை போட்டியிட அனுமதிக்க வேண்டும்

இந்த இரண்டு அம்சங்கள் பற்றியே அறுவர் சமிட்டி தற்சமம் பரிசிலனை செய்வதாக ஐ. தே. க. பொதுச்செயலாளர் நந்தலால் பர்னாண்டோ தெரிவித்தார்.

தற்போதைய அரசமைப்புச் சட்டத்தின் கீழ், திருத்தம் ஏதும் செய்யாமலே, திரு. ஜெயவர்த்தன மூன்றாவது முறையாக ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடலாம்.

இப்படி அரசு வட்டாரங்களில் செல்வாக்குள்ள பிரிவு ஒன்று கூறுகின்றதாம்.

அரசமைப்புச் சட்டத்தின் 30 (2) பிரிவு பின் வருமாறு கூறுகின்றது.

''ஜனாதிபதி மக்களினால் தெரிவுசெய்யப்பட வேண்டும். அவர் இரண்டுமுறை பதவி வசிக்கலாம்.

மூன்றாவது முறை திரு. ஜெயவர்த்தன போட்டியிடுவதை இவ் விதி தடுக்கவில்லை.

ஒருமுறைதான் அவர் மக்களினால் ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டார் என்று அவ் வட்டாரங்கள் கூறுகின்றன. (இ-எ)

## 1990 ஆம் ஆண்டிற்கான A L விஞ்ஞான மாணவர்களுக்கு

பௌதிகவியல் - Mr. மணியம் B.Sc
Sat - Sun 6.30

தாவரவியல் - Mr. சிவவீரசிங்கம் B,Sc
Sat - Sun 7.30

விலங்கியல் - Mr. தம்பிராஜா B.Sc
Sat - Sun 8 30

இரசாயனவியல் - Mr. நாகரட்ணம் B.Sc
Sat - Sun 9.30

பௌதிகவியல் - Mr. ரவீந்திரநாதன் B.Sc
Sat - Sun 10 30

தூய/பிரயோக கணிதம் - Mr. வெக்ரர் B.Sc
தூய/பிரயோக கணிதம் - Mr. கணேசன் B.Sc
Sat - Sun 7.30 — .930

## ஆரம்பம்: 9-4-1988

3ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.
(ஆஸ்பத்திரி வீதிக்கு அண்மையில்)
[மேலும் விபரங்களுக்கு நேரில்]

## கொத்தணி அதிபர்கள் பொறுப்பு

அச்சுவேலி, ஏப் 7

கொத்தணி அமைப்பிற்குப் பொறுப்பான கொத்தணி அதிபர் வெள்ளிக்கிழமைகள் தோறும் கொத்தணி அமைப்பிற்கு உட்பட்ட ஏனைய பாடசாலைகளின் அலுவல்களைக் கவனிப்பார்கள்,

கொத்தணி அமைப்பிற்கு உட்பட்ட ஏனைய பாடசாலைகளின் அதிபர்கள் கொத்தணி அமைப்பு அலுவலகத்தில் தமது பாடசாலைகளின் தேவைகள், குறைபாடுகள் பற்றி நேரில் சந்தித்து கலந்துரையாடலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது

(இ-11)

## வெளியீட்டு விற்பனை

தெருத் தூசி யோனின் மற்றுமோர் படைப்பு 'ஆசைகளின் ஓசைகள்'' வாசிக்கத் துடிக்கும் உள்ளங்களே உங்கள் வாழ்க்கையில் வாசனை வர ஆசைகளின் ஓசைகள் என்ற நூலை வாசியுங்கள். ஆசைகள் மனிதனை எவ்வாறு ஆட்சி செய்கின்றன என்ற தத்துவம் இந் நூலில் தளைக்கவிடப்பட்டுள்ளது இந்நூலை வசிக்கும் ஒவ்வொரு உள்ளமும் ஒரு விமர்சனக் கடிதம் எழுத மறக்காதீர்கள் புத்தகங்கள் கிடைக்குமிடம்!

(1) பிறேமளா கபே
75 பற்றிக்ஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

(2) பரம் ஸ்ரோர்ஸ்
கண்டி வீதி,
சாவகச்சேரி.

(2744)

## பாலர் பகல் பராமரிப்பு நிலையம் பாலர் பாடசாலை ஆசிரியர் வெற்றிடம்

பரந்தன் நவஜீவன பாலர் பகல் பராமரிப்பு நிலையத்தில் பாலர் பாடசாலை ஆசிரியர் பதவிக்கு பெண்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தகுதி:- க. பொ. த (சா. த) பரீட்சையில் கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தி. பாலர் பாடசாலை ஆசிரியப் பயிற்சி நெறியில் 6 மாதத்திற்கு மேற்பட்ட பயிற்சி பெற்றோருக்கும் முன் அனுபவம் உடையோருக்கும் முன்னுரிமை வழங்கப்படும்,

விண்ணப்பதாரி திருமணம் ஆகாதவராகவும், வயது எல்லை 20—30 உடையவராகவும் கிறிஸ்தவராகவும் இருக்க வேண்டும்.

விண்ணப்பங்கள் அண்மையில் பெற்ற இரண்டு நற்சாட்சிப் பத்திரங்களுடன் நிர்வாகி, நவஜீவனம் என்ற முகவரிக்கு 20-4-88ஆம் திகதியின்முன் அனுப்பப்படல் வேண்டும்.

நிர்வாகி, நவஜீவனம்-பரந்தன்.
(2482)

## PAPER CLASSES

## A/L COM 1988 Week End Classes

வடமராட்சி புகழ்

பொருளியல் : திரு லோகசிங்கம்
11-00 — 12-00 a. m.

வர்த்தகம் : திரு தேவா விஸ்வநாத்
12-00 1-00 p m.

கணக்கியல் : திரு. ஸ்ரீ கணேசமூர்த்தி
1-00 2-00 p. m.

அளவையியல்: திரு விக்கி
10-00 — 11-00 a. m.

1989 புதிய பிரிவுகளும் ஆரம்பம்: 03-04 88

The Jaffna Education Centre
சாந்தி தியேட்டர் அருகு

## இலவச நூல்

அச்சுவேலி, ஏப் 7

இடைக்காடு இந்து நெறிக் கழகம் ''திருஅருட்பாமாலை [வழித்துணை]'' என்ற நூலை அச்சிட்டு இலவசமாக விநியோகித்து வருகின்றது. (இ-11)

## பாடசாலைக்கு ரூபா 7,000

பண்டத்தரிப்பு, ஏப் 7

பண்டத்தரிப்பு கொத்தணி, காரைநகர் கொத்தணி, சுழிபுரம் கொத்தணி ஆகியவற்றிற்கு தலா 7,000 ரூபா வீதம் மூன்றன் வட்டுக்கோட்டை வட்டாரக் கல்வி அதிகாரியினால் வழங்கப்பட்டுள்ளது.

வட்டாரத்தில் ப்ரீட்சைகள் நடத்தியதன் மூலம் கிடைத்த லாபமே பாடசாலைகளுக்கு இவ்வாறு பகிர்ந்தளிக்கப்பட்டது. (இ-120)

## 3ஆம் வருட நினைவஞ்சலி



திருமதி
மேரி பற்றிமா புவிராசசிங்கம்
(முல்லைத்தீவு பிரபாகர் பார்மஸி உரிமையாளர்)

தோற்றம்: 22 - 10 - 1951 ★ மறைவு: 07 - 04 - 1985

''உயிருள்ளவரை எம்மை நேசித்தாய் உதிர்ந்தபின் உன்னை மறவோம்''

அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இன்று முல்லைத்தீவு புனித பேதுருவானவர் ஆலயத்தில் காலை 6-15 மணிக்கும் 08 - 04 - 88 சில்லாலை புனித சந்தியோமையார் ஆலயத்தில் மாலை 5-15மணிக்கும் இரங்கற் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

பிரிவால் துயருறும்
கணவன், பிள்ளைகள்

(2442)

## உள்ளத்தை உருக்கும் 6ஆம் மாத நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



அமரர் செல்லையா கனகலிங்கம்
[தொழிலதிபர் சுருட்டுத் தொழிற்சாலை, கோண்டாவில்]

மலர்வு: 17 02-1920 உதிர்வு: 12-11-1987

நேயுற்று ராமல் நொந்து மனம் வாடாமல்
பாயில் கிடவாமல் எம்மையெல்லாம் பரிதவிக்க-விட்டு
பதைபதைக்க உயிர் நீத்து விட்டீர்களே!
நாட்கள் மறையலாம் வருடங்கள் ஆகலாம் - ஆனால்
உங்களை நாம் என்றும் மறக்கவே முடியாது

இறுதிக் கிரியையில் கலந்து கொண்டும், அனுதாபச் செய்திகள் தெரிவித்தும், எங்கள் துன்பங்களில் பகிர்ந்து கொண்ட எல்லோருக்கும் நன்றி தெரிவித்து இன்று 7-4-88 வியாழக்கிழமை அந்தியேட்டிக்கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் போது தயவு செய்து அதில் தாங்களும் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்ம சாந்தியடைய பிரார்த்திக்குமாறும் வேண்டுகிறோம்

எமது கண்ணீர் அஞ்சலிகளுடன் அன்புத்தெய்வத்தின் ஆத்ம சாந்திக்காய்ப் பிரார்த்திக்கும

அன்பு மனைவி, பாசமுள்ள பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,

அம்மன் கோவிலடி,
கோண்டாவில்.

(2447)

## இரண்டாவது ஆண்டு நினைவஞ்சலி

அமரர் க மு கந்தையா

பருத்தித்துறை, தும்பளையைச் சேர்ந்தவரும் எனது சிறிய தந்தையாருமாகிய அமரர் க. மு. கந்தையா அவர்களின் ஞாபகார்த்தமாக 09. 04. 88 சனிக்கிழமை செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் நடைபெறும் அபிடேக ஆராதனைகளிலும், அடியார்மடத்தில் நடைபெறும் மகேசுவர பூசையிலும் கலந்துகொள்ளுமாறு உறவினர் நண்பர்களைக்கேட்டுக்கொள்ளுகிறேன்.

வே. முருகேசு சுவாமிகள்
(2741)

## 3 ஆவது ஆண்டு நினைவஞ்சலி



திரு. பொன்னம்பலம் சுப்பிரமணியம்

மலர்வு 11— 7— 1935 உதிர்வு 07— 04— 1985

மனைவி, பிள்ளைகள்,
உறவினர்.

செட்டிகுறிச்சி
பண்டத்தரிப்பு

(2444)



புலமைப் பரிசில் புனிதனர் அமரர்
அருணாசலம் பாலகுமாரின்

## 6 ஆம் மாத நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

மலர்வு 6-6-68

உதிர்வு 13-10-87

பாலனே! மேலான தேவனே! உம்மைப் பிரிந்து மண்ணிலே கண்ணீர் வெள்ளத்தில் நீந்துகின்றோம். உமது ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

அருணாசலம் நாகேஸ்வரியின் மூத்தமகன் அ. பாலகுமார் அவர்களின் (யாழ்ப்பாண இந்துக் கல்லூரி க. பொ. த. (உயர்தரம்) அந்தியேட்டி நாளை (8-4-88) நடைபெறவிருப்பதால் உற்றார், அன்பர், நண்பர் அனைவரையும் பங்குபற்றி அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்குமாறு வேண்டுகின்றோம்.

பிரிவால் துயருறும்
அருணாசலம் நாகேஸ்வரி
தம்பதிகள்

'அருளகம்'
கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில்.

2406

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயசங்கற்பம்

இல்லாததற்கு ஏங்காது உள்ளதைக் கொண்டு உள்ளம் மகிழ்க.

— பகவான் ஸ்ரீசத்திய சாயிபாபா.


# உதயன்

உண்மை - விழிப்புணர்வு - நடுநிலைமை

இல: 298 /2 நாவலர் வீதி, தொலைபேசி 24805
யாழ்ப்பாணம். 22073
07-04-1988 த பெ இல:-23


## நோய் தடுப்பும் உயிரிழப்புத்தவிர்ப்பும்

எமது பிரதேச மக்களைப் பீடிக்கும் நோய்களில் 80 சத விதமானவை தடுக்கப்படக் கூடியவை. சுகாதார விதிகளைக் கடைப் பிடிப்பதன் மூலம் அவற்றைத் தடுத்து விடலாம்.

அன்றாட வாழ்க்கையில் சுத்தம், சுகாதாரம் என்பவற்றைப் பேணுவதன் மூலம் சிறுவர், சிறுமியரை வாட்டும் பல நோய்களைத் தடுக்க முடியும்.

போரூட் நிறுவனம் சண்டிலிப்பாயில் ஏற்பாடு செய்திருந்த கருத்தரங்கு ஒன்றில் டாக்டர் க. ராதாகிருஷ்ணன் மேற்கண்ட கருத்துக்களை வெளியிட்டிருக்கிறார்.

அவரது அறிவுரைகள் கவனிக்கப்பட வேண்டியவை. அர்த்த புஷ்டியானவை. கருத்தில் கொள்ளப்பட வேண்டியவை.

நோய்கள் வந்த பின்னர் சிகிச்சை பெற்றுத் தீர்ப்பதை விட, அவை வருமுன்னர் தடுப்பதே உரிய மார்க்கமாகும். நோய்கள் அணுகாமல் தடுப்பதற்கு தனிநபர் சுகாதாரமும், சுத்தமான பழக்க வழக்கங்களும் பிரதானமானவை.

வயிற்றோட்டம், வாந்திபேதி, குடல் வியாதிகள் போன்ற தொற்று நோய்கள் தனிநபர் சுகாதாரம் பேணப்படாமையாலும், சுத்தமான பழக்க வழக்கங்கள் கடைப்பிடிக்கப்படாமையாலுமே பரவுகின்றன. சுத்தம் சுகம் தரும் என்பதை மறந்து விடாமல், சிறுவர்களுக்கும் அதன் மகத்துவத்தைப் போதிக்க வேண்டும்.

இலங்கையில் வயிற்றோட்ட நோயினால் மட்டும் ஆண்டுதோறும் ஆறாயிரம் பேர் உயிரிழப்பதாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது.

தகுந்த பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுப்பதன் மூலம் இந்த விதமான உயிரிழப்புகளில் 90 சதவீதமானவற்றை தவிர்த்துக் கொள்ளலாம் என்று கொழும்பில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற வைத்தியக் கருத்தரங்கு ஒன்றில் தெரிவிக்கப்பட்டது.

மொத்தத்தில் சுகாதாரத்தையும் சுத்தத்தையும் பேணுவதன் மூலம் நோய் வராது தடுக்கலாம். நோய்களைத் தடுப்பதன் மூலம் வேண்டாத, வீணான உயிரிழப்புகளைத் தவிர்க்கலாம்.

இந்நாளில் பலரும் தேகாரோக்கியம் குன்றி நோயாளிகளாக மாறுவதற்கு சத்துணவு உட்கொள்ளாமையே — போஷாக்கின்மையே — காரணமாகும். சத்துணவில்லாததால் பெரும் எண்ணிக்கையான குழந்தைகள் பயங்கரமான நோய்களால் பீடிக்கப்படுகின்றனர்.

வெளிநாடுகளில் இருந்து தகரங்களிலும், போத்தல்களிலும் அடைக்கப்பட்டு வரும் உணவு வகைகளை சத்தமிக்கவை என்று நம்மில் பலரும் தப்பாக நினைக்கிறார்கள். விலை கூடிய பொருள்கள் தரமானவை, சத்தானவை என்று நினைப்பவர்களும் உள்ளனர். இவை போலித் தனமான நம்பிக்கைகள்.

நம்மைச் சுற்றி, எமது சூழலில், மிக மலிவு விலையில் பெறக்கூடிய சத்தான உணவு வகைகள், இலைக்கறி வகைகள் பலப்பல உள்ளன. அவற்றை இனங்கண்டு பயன்படுத்தத் தெரியாமல் நாம் வீணே நோயாளிகளாக மாறுகிறோம்.

மக்கள் சுகவாழ்வில் அக்கறை காட்டும் தொண்டர் நிறுவனத்தினர், இயக்கத்தினர், டாக்டர்கள் ஆகியோர் ஒன்று சேர்ந்து எமது சூழலில் உள்ள சத்துமிகுந்த உணவு வகைகளை — பயிர் வகைகளை பொதுமக்களுக்கு இனங்காட்ட வேண்டும்! அவற்றின் பெறுமதியையும், சிறப்பையும் கருத்தரங்குகள் மற்றும் கிராம மட்டத்திலான பிரசாரங்கள் மூலம் மக்களுக்குப் புகட்ட வேண்டும்.

ஆஸ்பத்திரிகளைக் கட்டுவதற்கும், மருந்துகளை விநியோகிப்பதற்கும் செலவிடும் பணத்தில் ஒரு சிறு தொகையை இதற்குச் செலவிட்டால் அதனால் பெரும் பலன் உண்டாகும். பலரை நோயாளிகள் ஆவதிலிருந்து தடுக்கலாம். பல வீணான உயிரிழப்புகளையும் தவிர்க்கலாம்.

## எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகம்!

### விரைவில் அரசு அறிவிப்பு வரும்

சென்னை, ஏப். 6

டாக்டர் எம். ஜி. ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம் நிறுவுவதற்கான அறிவிப்பை தமிழ் நாடு அரசு விரைவில் வெளியிடும்.

தமிழ்நாடு ஆளுநர் டாக்டர் பி. ஸி. அலெக்ஸாண்டர் இத்தகவலை வெளியிட்டார்.

இன்னும் சில தினங்களில் இப்பல்கலைக்கழகத்துக்கான துணைவேந்தர் நியமிக்கப்படுவார் என்றும் டாக்டர் அலெக்ஸாண்டர் சொன்னார். (எ)

திபெத் பிரச்சினை:

# சீனு சென்று பேச்சு நடத்தத் தயார் என்று தலாய்லாமா அறிவிப்பு

லண்டன், ஏப் 6

சீனாவுடன் பேச்சு நடத்தத் தயார் என்று தலாய்லாமா அறிவித்து உள்ளார்.

லண்டனில் செய்தியாளர் மத்தியில் தலாய்லாமா கடந்த செவ்வாயன்று பேசினார்.

திபெத்திய மக்களின் அபிலாஷைகளுக்கு சீனா இணங்குமானால் சீனா சென்று பேச்சு நடத்தத் தயாராக உள்ளேன்.

நடுவழிசென்று திபெத் பிரச்சினைக்கு தீர்வுகாண வேண்டும்.

சீனாவுடன் பகைக்கக் கூடாது என்ற எண்ணத்தில் பிரிட்டன் அதிக அக்கறை காட்டி வருவதை நான் கண்டிக்கின்றேன்.

இப்படி தலாய்லாமா தெரிவித்தார்.

சீனாவுக்கு விஜயம் செய்யும்படி பஞ்சன் லாமா, தலாய்லாமாவுக்கு அழைப்பு விடுத்திருந்தது தெரிந்ததே.

பஞ்சன்லாமா சீன அரசில் உயர் பதவிவகித்து வருகின்றார் (எ)

குவைத் விமானக் கடத்தல்:

## 24 பெண் பயணிகள் விடுவிப்பு

## ஏனையோரை விடுவிக்க கடத்தல்காரர் நிபந்தனை!

தெஹ்ரான், ஏப் 6

கடத்தப்பட்ட குவைத் போயிங் விமானத்தில் இருந்து 24 பெண்கள் விடுவிக்கப்பட்டனர்.

எஞ்சியோரை கடத்தல்காரர்கள் பணயம் வைத்திருக்கின்றனர்.

குவைத் அரச குடும்பத்தைச் சேர்ந்த மூவர் பணயக் கைதிகளில் உள்ளனர்.

குவைத்தில் சிறை வைக்கப்பட்ட 15 முஸ்லிம் தீவிரவாதிகள் விடுதலை செய்யப்பட்டால் மட்டுமே பணயக்கைதிகளுடன் விமானம் விடுவிக்கப்படும் என்று கடத்தல்காரர்கள் எச்சரித்துள்ளனர். இல்லாவிடில் விமானம் தகர்க்கப்படும் என்று பயமுறுத்தி உள்ளனர்.

115 பேருடன் இவ் விமானம் கடந்த செவ்வாய் காலை கடத்தப்பட்டது.

போயிங் 747 ரக விமானத்தில் 100 பயணிகளும் 15 சிப்பந்திகளும் இருந்தனர்.

பாங்கொக்குக்குச்சென்று கொண்டிருந்த இவ் விமானத்தை ஆயுதம் தரித்தவர்கள் பலவந்தமாக ஈரானின் வடபகுதியில் இறக்கினர்.

கடத்தியவர்கள் விமானத்திற்கு எரிபொருள் நிரப்பி உதவும்படி ஈரானிய அதிகாரிகளைக் கோரினர்.

அனுமதியின்றி விமானத்தை ஓட்டினால் குண்டு வைத்துத் தகர்க்கப்படும் என்றும் கடத்தல்காரர்கள் விமான ஓட்டியை எச்சரித்தனர்.

ஈரானிய அதிகாரிகளுக்கும் கடத்தல்காரர்களுக்கும் இடையே பேச்சுக்கள் இடம்பெறுகின்றன. (எ)

இன்னும் 60ஆண்டுகளில்

## சனத்தொகையில் இந்தியாவுக்கு முதலிடம்! 2 ஆம் இடமே சீனுவுக்கு

நியூயோர்க், ஏப் 6

இன்னும் அறுபது ஆண்டுகளில் உலகில் சனத்தொகை கூடிய நாடு என்ற பெருமை இந்தியாவுக்கு கிடைக்கும்.

சீனு இரண்டாம் இடத்துக்குத் தள்ளப்பட்டுவிடும் என்று உலக சனத்தொகைக் கமிட்டி அறிவித்துள்ளது.

2025 ஆவது ஆண்டில் இந்தியாவின் சனத்தொகை 150 கோடியாக இருக்கும்.

கடுமையான குடும்ப கட்டுப்பாட்டுத் திட்டம் காரணமாக சீனுவில் சனத்தொகை அதிகரிக்காது.

இப்படி உலக சனத்தொகைக் கணக்கெடுப்புக் கமிட்டி பேலும் தெரிவித்தது

சனத்தொகை கூடிய நாடுகளின் பட்டியலில் 13, 14 ஆவது இடங்களை பாகிஸ்தானும் நைஜீரியாவும் பெற்றுள்ளன. அடுத்த அறுபது ஆண்டுகளில் இந்த இரண்டு நாடுகளும் முறையே 4, 5 ஆம் இடங்களுக்கு வந்துவிடும் என்றும் அக்கமிட்டி அறிவித்திருக்கின்றது

சீனுவின் இன்றைய சனத்தொகை சுமார் 100 கோடி. இந்தியாவின் சனத்தொகை சுமார் 80 கோடி. (எ)

## வெளி உலகில்

மலைக்கோட்டை

## ரயில் விபத்து வழக்கில் மூவருக்கு மரண தண்டனை!

சென்னை, ஏப் 6

திருச்சி, மலைக்கோட்டை ரயில் விபத்து வழக்கில்குற்றஞ்சாட்டப்பட்டவர்களில் மூன்று பேருக்கு திருச்சி தலைமை நீதிபதி மரண தண்டனை விதித்தார்.

ஏனைய மூன்று பேர் விடுதலை செய்யப்பட்டனர்.

15- 3- 1987 இல் அரியலூர் பாலம் குண்டு வைத்துத் தகர்த்தப்பட்டதைத் தொடர்ந்து மலைக்கோட்டை எக்ஸ்பிரஸ் ரயில் விபத்துக்குள்ளானது.

இதில் 26 பயணிகள் உயிரிழந்தனர் 146 பேர் காயமடைந்தனர்.

ரயில் கவிழ்ப்புச் சதித்திட்டம் தீட்டியதாக ஆறு பேர் மீது குற்றஞ் சாட்டப்பட்டது

விசாரணையில் 198 பேர் சாட்சியம் அளித்திருந்தனர். (ஓ-எ)

### கொலம்பியாவில் 30 குடிமக்கள் சுட்டுக் கொலை!

கொலம்பியா மாநிலத்தின் வட பகுதியில் ஆயுதம் தரித்த கோஷ்டியொன்றினால் 30 பேர் கொல்லப்பட்டனர்.

ஞாயிற்றுக்கிழமை இப்படுகொலை இடம்பெற்றதாக அறிவிக்கப்படுகிறது.

வலதுசாரி அல்லது இடது சாரி கெரில்லாக்களே இப்படுகொலையைப் புரிந்திருக்கலாம் என்று சொல்லப்படுகின்றது.

அதிகாரப் போட்டியில் இரண்டு கெரிலாக் குழுக்கள் அப்பகுதியில் ஈடுபட்டிருப்பதாக பி பி சி. வானொலி தெரிவித்தது. (எ)

### பிரிட்டிஷ் அமைச்சர் மலேசிய விஜயம்!

கோலாலம்பூர், ஏப் 6

பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சர் சேர் ஜெப்ரி ஹோவ் மலேசியாவுக்கு விஜயம் செய்திருக்கின்றார்.

சிங்கப்பூர், புரூனி, மலேசியா நாடுகளுக்கு மேற்கொண்டிருக்கும் 2 வாரகால விஜயத்தின் முதல் கட்டமாக பிரிட்டிஷ் அமைச்சர் மலேசிய அரசுடன் பேச்சு நடத்தியிருக்கின்றார்

### சீன இராணுவத்துக்கு புதிய தோற்றம்!

சீன இராணுவம் புதிய தோற்றத்தைப் பெறவிருக்கின்றது.

மேற்கத்திய பாணியிலான சீருடைகளை மூன்று கோடி இராணுவத்தினர் புதிய திட்டத்தின் கீழ் பெறுவர்.

சுமார் 70 ஆயிரம் அதிகாரிகளுக்கு முதற்கட்டமாக புதிய சீருடை வழங்கப்படும் என்று நவசீன செய்தி ஸ்தாபனம் அறிவித்திருக்கின்றது.

# ஆசிரியர்கள்தான் சமுதாயத்தை கட்டி எழுப்புபவர்கள்

## கொழும்புக் கருத்தரங்கில் உரை

— கொழும்பிலிருந்து சிறப்புச் செய்தியாளர் பொ. கந்தசாமி —

கொழும்பு, ஏப் 7

ஆசிரியர்கள்தான் சமுதாயத்தைக் கட்டி எழுப்புபவர்கள். அவர்களுக்குப் புதிய கல்வி நிர்வாக மாற்றங்கள் தொடர்பான சகல விடயங்களும் தெளிவுபடுத்தப்பட வேண்டும்

சர்வதேச சுதந்திர ஆசிரியர் தொழிற்சங்க ஆசிய — பசுபிக் பிரதிநிதி திரு. குர்ணம்சிங் மேற்கண்டவாறு கூறினர்.

கல்வித்துறை நிர்வாகத்தில் புதிய மாற்றங்களும் அதன் விளைவுகளும் என்னும் பொருள் பற்றிய கருத்தரங்கு வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிசன் வீதியிலுள்ள பிறைற்றன் ஹோட்டலில் திங்கட்கிழமை காலை ஆரம்பமானது.

வெஸ்ஸின் இலங்கைப் பிரதிநிதி திரு. பொற்றவோக மங்கள விளக்கேற்றிக் கருத்தரங்கை ஆரம்பித்து வைத்தார்

சங்கத் தலைவர் திரு கே சே மசுந்தரம் தலைமையில் திரு. த குமாரசாமியின் தமிழ்த் தாய் வணக்கத்துடன் கருத்துரைகள் ஆரம்பமாயின.

திரு குர்ணம்சிங் தொடர்ந்து உரையாற்றுகையில், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் இக்கருத்தரங்குக் காலம் பொன்னெழுத்துகளால் பொறிக்கப்பட வேண்டும்.

இன்று இலங்கையின் வடக்கிலும் சரி, கிழக்கிலும் சரி, தெற்கிலும் சரி யுத்த காலத்தைப் போன்று நிச்சயமற்ற, பீதி நிறைந்த நிலைமை காணப்படுகின்றது

இந்த நெருக்கடிச் சூழ்நிலையிலும் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் இப்ரு வெஸ் என்பனவற்றுடன் இணைந்து இக்கருத்தரங்கை நடத்துவது மிகப் பொருத்தமானதும் பாராட்டிற்குரியதுமாகும்.

இப்படி அவர் கூறினர்.

வெஸ்-பிரதிநிதி திரு. பொற்றவோக உரையாற்றுகையில் கூறியதாவது:-

ஞாயிற்றுக்கிழமை நாட்டின் சில பகுதிகளில் ஏற்பட்ட அசம்பாவிதங்களால் இன்று இக்கருத்தரங்கு நடக்குமா ஆசிரிய சங்கப் பிரதிநிதிகள் வந்து சேர்வார்களா என்ற ஐயப்பாடு இருந்தது.

பலர் வந்துள்ளது அறிவைப் பெறுவதில் ஆசிரியர் பிரதிநிதிகளுக்கு இருக்கும் ஆர்வத்தை எடுத்துக் காட்டுகின்றது என்றார்.

யாழ் மாவட்ட பிரசாரச் செயலாளர் திரு. என் சிவபாதம் காலை நிகழ்ச்சி முடிவிலும், பொதுச் செயலாளர் திரு த மகாசிவம் மாலைக்கூட்ட முடிவிலும் நன்றி கூறினர் (இ-120)

### இலவச வெளியீடு

யாழ்ப்பாணம் ஏப். 7

யாழ். வண்ணை ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் ஆலயத்தில் கடந்த 1ஆம் திகதி பங்குனி உத்தர தினத்தன்று 'ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் துக்க நிவாரண அஷ்டகம்' இலவச வெளியீடு நடைபெற்றது.

இந்த இலவச வெளியீட்டை ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் ஆலயத்தில் பெற்றுக் கொள்ளலாம். (ஒ)

### ஆண்டு தோறும் 6 ஆயிரம் பேர் மரணம்

கொழும்பு, ஏப் 7

இலங்கையில் ஆண்டு தோறும் சுமார் 6 ஆயிரம் பேர் வயிற்றோட்டத்தினால் உயிரிழக்கின்றனர்.

இந்த எண்ணிக்கையில் 90 சதவீதமான உயிரிழப்புக்களை தகுந்த பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுப்பதன் மூலம் தவிர்த்துக்கொள்ளலாம்

கொழும்பில் நடந்த வைத்திய கருத்தரங்கு ஒன்றில் இத்தகவல்வெளியிடப்பட்டது. [இ-எ]

### சுவாமி சதானந்தா பிறந்ததினம்

யாழ்ப்பாணம், ஏப் 7

சுவாமி சதானந்தாவின் 54ஆவது பிறந்த நாள் விழா திருநெல்வேலி அடியபாதம் வீதியில் உள்ள இராமகிருஷ்ணாலயத்தில் இன்று மாலை 4 மணிக்கு நடைபெற உள்ளது

இதில் சிறப்புச் சொற்பொழிவு ... விருந்து ஒன்றும் நடைபெற உள்ளது. [இ-9]

### கண்ணுக்குள் கண்ணுக்குத் தெரியாத புழு

கொழும்பு, ஏப் 7

இலங்கைச் சிறுமிஒருத்தியின் கண்ணுக்குள் கண்ணுக்குத் தெரியாத புழு ஒன்று இருக்கக் கண்டுபிடிக்கப்பட்டது

இலங்கையில் இப்படி ஒரு கண்டுபிடிப்பு இடம்பெற்றது இதுவே முதல் தடவை என்று ஆய்வு அறிக்கை ஒன்றில் கூறப்பட்டுள்ளது.

14 வயதான இச்சிறுமி ஆறு ஆண்டுகள் இலங்கைப் பெற்றோருடன் நைஜீரியாவில் வாழ்ந்தவர்.

நான்கு ஆண்டுகளுக்கு முன்னர்தான் இலங்கை திரும்பினர்.

இட்து கண்ணினுள் ... புழுவின் பெயர் 'லோ ஆ Loa' என்பது. (அ-எ)

### குண்டு வெடித்து லெப்டினன்ட் மரணம்!

ஸ்ரீலங்கா இராணுவத்தைச் சேர்ந்த லெப்டினன் ஒருவர் செவ்வாயன்று தென் இலங்கையில்குண்டு வெடிப்புச் சம்பவம் ஒன்றில் உயிரிழந்தார்

அக்குரஸ்ஸயில் இச்சம்பவம் இடம்பெற்றது

பொது இடத்தில் காணப்பட்ட குண்டு ஒன்றை வெடிக்கச் செய்வதில் ஈடுபட்டிருந்த போதே இச்சம்பவம் இடம்பெற்றது.

பலத்த காயங்களுடன் லெப்டினன்ட் மாத்தறை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டார். அங்கு அவர் உயிர் பிரிந்தது (ஒ-எ)

பண்டாரவளை யொவன்புரவில்:

## வடபகுதி இளைஞரை காணப் பத்திரிகையாளர் படை எடுப்பு!

யாழ்ப்பாணம், ஏப்ரல் 7

வடபகுதி இளைஞர், யுவதிகளைச் சந்தித்து அவர்களது மனநிலையை அறிய தென்பகுதிப் பத்திரிகையாளர்கள் பண்டாரவளைக்குப் படையெடுத்துச் சென்றனர்.

கடந்த மாதம் 24 ஆம் திகதி முதல் 27 ஆம் திகதி வரை பண்டாரவளையில் யொவன்புர இளைஞர் முகாம் நடைபெற்றது.

இது குறித்து அறியவருவதாவது:

இந்த முகாமில் நாட்டின் பல பாகங்களிலும் இருந்து சுமார் பத்தாயிரம் வரையிலான இளைஞர் யுவதிகள் கலந்து கொண்டனர்.

தமிழ்ப் பகுதிகளில் இருந்தும் இம்முறை இந்த முகாமுக்கு அதிக பிரதிநிதிகள் சென்றிருந்தனர் என முகாமில் கலந்து கொண்ட இளைஞர் ஒருவர் தெரிவித்தார்.

இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ள தென்பகுதிப் பத்திரிகையாளர் பலர் பண்டாரவளைக்குச் சென்றிருந்தனர்

எனினும் பத்திரிகையாளர்களுக்கு ஏமாற்றமே கிடைத்தது.

பத்திரிகையாளர்களுக்கு தமிழ் இளைஞர், யுவதிகள் பேட்டி கொடுக்கத் தயங்கினர்

"நீங்கள் எமது பேட்டிகள், கருத்துக்கள், செய்திகளைத் திரித்து எமது எண்ணங்களை வேறுவிதமாக வெளியிட்டுவிடுவீர்கள்

"இது தமிழ்ப்பகுதி மக்களுக்குப் பழகிப்போன விஷயம். இனியும் நாங்கள் ஏமாறத் தயாரில்லை" என்று கூறிப் பேட்டியளிக்க மறுத்ததாக அறியவந்தது

எனினும் ஒருசிலர் சுருக்கமாகப் பேட்டி கொடுத்தனர்

"இங்கு நாம் உல்லாசமாக ஆடிப்பாட வரவில்லை. எம்மைப்பற்றிய உண்மையான செய்திகளைச் சிங்கள இளைஞர்கள், யுவதிகள் மற்றும் அதிகாரிகளிடம் நேரடியாகக் கூறவே விரும்புகிறோம்" என்றும் அவர்கள் கூறியதாகவும் தெரியவந்தது. (ஒ)



### பொய்யாமொழி

குறள்:

மடுத்தவா யெல்லாம் பகடன்னான் உற்ற இடுக்கண் இடர்ப்பாடு உடைத்து.

பொருள்:

தடைப்பட்ட இடங்களில் எல்லாம் (வண்டியை இழுத்துச் செல்லும்) எருது போல் விடாமுயற்சி உடையவன் உற்ற துன்பமே துன்பப்படுவதாகும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமண வைபவங்களுக்கேற்ற
★ மணிப்புரி
★ பெனரஸ்
★ காஞ்சிபுரம்
சேலைகளைப் பெற்றுக்கொள்ள
மயூரா சென்ரர்
13 B நவீன சந்தை, யாழ்நகர்.

# உதயன்

07-04-1988 வியாழக்கிழமை

சேட்டிங் சூட்டிங்ஸ்
குழந்தைகளுக்கான ஆடைகள்
சகல விதமான றெடிமேட்
ஆடைகளுக்கும்
யாழ்நகரில்
மயூரா சென்ரர்
13 B, நவீன சந்தை, யாழ்நகர்.

**ராணுவ. .**
(1ஆம்பக்கத்தொடர்ச்சி)
பட்டு. ஸ்ரீலங்கா இராணுவத்தினர் சேவையில் ஈடு. டுத்தப்பட்டுள்ளனர்.

இதனையடுத்தே புத்தம் அமைக்கப்பட்ட இராணுவ முகாம் களை அ‥ற்ற உதவுமாறு இந்திய அமைதிப்படையினரிடம் மகஜர்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

..ங்நகர், பாலையூறு, அனுராதபுரச் சந்தி, அன்புவழிபுரம், செல்வநாயகபுரம் ஆகிய பகுதிகளில் உள்ள மக்களே இந்த மகஜர்களைக் கையளித்தனர்.

(அ-ஓ-150)

**ஊர்வலம். .**
(1-மபக்கத் தொடர்ச்சி)
மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது.

பொலீஸார் திருப்பிச் சுட்டனர் ஊர்வலத்தில் சென்று கொண்டு இருந்த மஞ்சள் உடை அணிந்த ஒருவருக்குக் காலில் காயம் ஏற்பட்டது.

இச் சம்பவம் தொடர்பாக இரண்டுபேர் கைது செய்யப்பட்டனர்.

[ஓ-எ]

## நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்

### அமரர்
### திரு S.V இராஜமாணிக்கப்பத்தர்



தோற்றம்
11- 10- 1915

மறைவு
25- 3- 1988

எம் வாழ்வின் ஒளி விளக்கை திடீரென கடந்த 25- 3- 88 வெள்ளிக்கிழமை இழந்து ஆழ்ந்த துயரத்தில் தட்டுத் தடுமாறி இருந்த வேளை எம் மனப் புண்ணை தம குளிர்ந்த பார்வையால், சொல்லால, எழுத்தால் ஆற்ற முயன்ற அன்புள்ளங்களுக்கு எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

அன்னாரின் இல்லத்தில் 8 -4- 88 வெள்ளிக்கிழமை நடைபெற இருக்கும் அந்தியேட்டிக் கிரியைகளில கலந்து கொண்டு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் வண்ணம் அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்
மனைவி, பிள்ளைகள்
மருமக்கள், பேரப்பிள்ளைகள்
(2762)

## 6 ஆம் மாத நினைவஞ்சலி



### திரு. சிவசம்பு சோமசுந்தரம்

தோற்றம்:
14-10-1946

திதி:
7-4 1988

குடும்பத்தின் ஒளி விளக்காக, பாசத்தின் உறைவிடமாக, பாசகுடன எங்களைப் பாரினில் வாழ வைத்து, இடை நடுவில் விட்டுச் சென்றீரே! உலகில் உள்ளவரை உன் நாமம் மறந்திருக்கோம். உய்க வ இறைவன் கழல பற்றி!

மனைவி. பிள்ளை,
உறவினர்.

சப்பியன் லேன்,
நநதாவில,
கொக்குவில்.

**ஆபாசப்..**
[1-ம் பக்கத்தொடர்ச்சி]
சப் படங்களையும் களவாகக் காண்பித்து வருவதாகத் தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

அநேகமான மினி சினிமாக்கள் முறையாக அங்கீகரிக்கப்படாக ஒழுதிலும் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதை நாம் தவிர்த்து வந்துள்ளோம் ஆயினும் தற்போதைய சூழ்நிலையில் இப்படியான சமூக விரோத செயலாகக் கருதப்படும் ஆபாசப்படங்கள் போன்ற வற்றை காண்பிப்பதை அனுமதிக்க முடியாது என்பதை மிகத் தெளிவாகத் தெரிவித்துக் கொள்ளவிரும்புகிறேன்.

இந்த அறிவுறுத்தலை மீறி எந்தவொரு மினி சினிமா அல்லது சினிமா தியேட்டர் உரிமையாளரும் நடந்து கொண்டால் அவர்களுக்கான மின்தொடர்பைத் துண்டிப்பது மட்டுமல்லாமல் படம் காண்பிக்கப்படும் வீடியோ கசற், டெக் போன்ற உபகரணங்களைப் பறிமுதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

இவ்வாறு சுற்று நிருபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-க)

## யூனிவேர்சல்

கந்தர்மடம்—யாழ்ப்பாணம்

### A/L — 90

தாவரவியல்

ஆசிரியர்:

### ஐங்கரநேசன். பொ.

ஆரம்பம்:

9 4 88 காலை 6.30.

[2305]

## ஓராண்டு நினைவஞ்சலி



### அருளானந்தம் பிலிப் ஜேக்கப்
(உரிமையாளர்: ஜேக்கப் அன் சொம்பனி)

பிறப்பு:
1—5—1913

இறப்பு:
7—4—1987

எங்கள் இல்லத்தின் தெய்வமாகத் துலங்கி எங்கள் நல்வாழ்வுக்கு வழி காட்டியாய் நின்று எம்மால் மறக்க முடியாதவாறு உமது பாசத்தால் எம்மைப் பணித்து நின்ற எமது தெய்வமே எம்மை விட்டுச் சென்று ஓராண்டு கடந்து விட்டனவாயினும் உமது நினைவு எமது உள்ளத்தை விட்டு நீங்காது உமது ஆத்மா என்றென்றும் எம் மனதில் நிலைத்து நிற்கும்.

என்றும் உமது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்,

அன்பு மனைவி மக்கள்
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

68. பழைய பூங்கா வீதி,
யாழ்ப்பாணம்.
(2761)

## யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்
### இலங்கை

மருத்துவபீடம்

மருத்துவபீட மாணவர்களுக்கான 1988 / 89ஆம் கல்வியாண்டு மறு அறிவித்தல் வரை பிற்போடப்பட்டுள்ளது.

- பதிவாளர்

## நீத்தார் பட்டியல்

### திரு. க. தம்பிராசா-ஆனைக்கோட்டை

ஆனைக்கோட்டை பழம் வீதியைச் சேர்ந்த கணபதி. தம்பிராசா 06 - 04 - 88 புதன்கிழமை காலமாகி விட்டார். இவர் ஆசைப்பிள்ளையின் அன்புக்கணவரும், காலஞ் சென்ற கணேசன் (துறைமுக அதிகாரசபை முன்னாள் ஊழியர்) பொன்னம்பலம் (அபிவிருத்தி வேலைகள் அத்தியட்சகர் கச்சேரி வவுனியா) தியாகராசா (பெற்றோலியக் கூட்டுத்தாபனம் கொழும்பு). செல்லம், புவனேஸ்வரி, மகேஸ்வரி, நவஜோதி ஆகியோரின் அன்புத்தந்தையும், காலஞ் சென்ற பொன்னையா, அலெக்ஸ்சாண்டர் [நிர்வாக அதிகாரி உதவி அரசாங்க அதிபர் பணிமனை தெல்லிப்பளை] துரைராசா [முன்னாள் மத்திய வங்கி அதிகாரி] அகஸ்தீன் [கூட்டுறவு மொத்த விற்பனைத் திணைக்களம் யாழ்ப்பாணம்] கமலா, பவளம், ஜெயந்தி, ஆகியோரின் அன்பு மாமனும்.

இரவீந்திரன், [கட்டடத் திணைக்களம் யாழ்ப்பாணம் வடக்கு] ரறன் [துறைமுக அதிகாரசபை] நிச்சேட் ஜெகநாதன் (தொலைத்தொடர்புத் திணைக்களம் கொழும்பு). விஜயநாதன் [இத்தாலி] தயாபரன், கருணாரன் யெகு, குணநந்தன், ஜெகாநந்தன், சத்தியேந்திரன் [பொறியியல் பீடம் பேராதனை], மஞ்சுளா [சட்டத்தரணி] நிர்மலா [பொரளை வைத்தியசாலை] சியாமளா, கோமளா, காந்தி, குட்டம்மா, ஜெயமணி, சந்திரா, சுகன்யா [மருத்துவபீடம் யாழ்ப்பாணம்] யமுனி, சுமதி, சந்தினி, நிலனி ஆகியோரின் பேரனும்.

செப்னு டயானு தபீதா, நிலர்தன் ஜெனு, மிதிலா ஆகியோரின் பூட்டனுமாவார். அன்னாரின் பூதவுடல் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக ஆனைக்கோட்டை கூழைக்கைதீவு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

பழம் வீதி,
ஆனைக்கோட்டை.
தகவல்
ந. இரவிந்திரன்
[2319]

### சுப்பிரமணியம் கந்தப்பிள்ளை

விழிசிட்டி தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், இளைப்பாறிய ஆசிரியருமான சு. சந்தப்பிள்ளை காலமாகிவிட்டார். அன்னார் காலஞ் சென்ற இராசம்மாவின் அன்புக்கணவரும், திலகவதி (யாழ். இந்து மகளிர் கல்லூரி ஆசிரியை), சிவகடாட்சம் [கணக்காளர்], லோகேஸ்வரி [வேம்படி மகளிர் கல்லூரி], செந்திற் பணி தேவி ஆகியோரின் அன்புத் தந்தையும், இராஜரத்தினம் (யாழ் இந்துக்கல்லூரி நூலகர்), செந்திலிங்கம் [காங்கேசன்துறை சீமெந்துக் கூட்டுத்தாபனம்], டாக்டர் திருமதி ச.சிவகடாட்சம் (யாழ் போதனா வைத்தியசாலை) ஆகியோரின் மாமனாரும், அம்பலவாணரின் சகோதரரும், செல்வன் குகானந்தனின் [யாழ் இந்துக் கல்லூரி] பாட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று வியாழக்கிழமைபி. ப. 1-00 மணியளவில் 74, அரசடி வீதியில் உள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெறும்.

[2765]
தகவல்
பொ. இராஜரட்ணம்

### திரு. நடராஜா ஜெகதீஸ்வரன்
(உதவி இயக்குனர், இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்)

தெல்லிப்பழையைச் சேர்ந்த நடராஜா ஜெகதீஸ்வரன் 02 04 88 இல் காலமானார். இவர் பன்னாலையைச் சேர்ந்த காலஞ் சென்ற நடராஜா தம்பதிகளின் மூத்த புதல்வரும் சோமாதேவின் அன்புக்கணவரும், முரளிதரன் (U K) வித்தியாதரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற மனோகரன், மனோராணி ஆகியோரின் சகோதரரும், மகேஸ்வரன் (நைஜீரியா) கௌரிதேவி ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்ற ஆறுமுகம், திருமதி நாகம்மா ஆறுமுகம் ஆகியோரின் மருமகனும் ஆவர் அன்னாரது இறுதிச் சடங்கு 07 04-88 வியாழக்கிழமை மாலை 3-00 மணி அளவில் தெல்லிப்பழை கட்டுப்பிட்டி மயானத்தில் நடைபெறும் தயவு செய்து இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திருமதி சோ. ஜெகதீஸ்வரன்

தெல்லிப்பழை கிழக்கு,
தெல்லிப்பழை.
(2764)

## 6ஆம் மாத அந்தியேட்டிக்கிரியை



ச. மகேஸ்வரகுமார்
07 . 01 . 1969



சதாசிவம் சின்னம்மா
01 . 06 . 1935



ச. விமலாதேவி
13 . 02 . 1958

11-10-87 இல் அகால மரணமடைந்த எங்கள் அம்மா, அக்கா, தம்பிகளான அன்புத் தெய்வங்களே!

தந்தை அகால மரணமடைந்த துயர்மாறமுன் எங்களின் அடைக்கலமாய், ஒளிவிளக்காய்த் திகழ்ந்த உங்களை காலன் கவர்ந்து எங்களை ஆதரவற்றவர்களாக்கி விட்டானே! என்ன கொடுமை இது.

உங்களைக் காலன் கவர்ந்து விட்டாலும் எங்கள் மனங்களில் நீங்காத ஒளிவிளக்குகளாய்த் திகழ்கிறீர்கள். உங்களை எம வாழ்நாளில் என்றும் மறவோம்

உங்கள் ஆத்மாக்கள் சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

11 ஆம் வட்டாரம், நெடுந்தீவு
(2307)
அன்புப் பிள்ளைகள், சகோதரங்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## 6 ஆம் மாத நினைவஞ்சலி



### இ. திருபாகரன் [கிருபா]

[1ஆம் வருட உயிரியல் விஞ்ஞான மாணவன்]

சொந்தங்கள் தோன்றிய சோகங்கள் ஊறிய
தாயின் மடியில் தாயக மண்ணில
14 - 08 - 1965 ★ 12 - 10 - 1987

அருயிர் நண்பனே கிருபா!

உன்னுடன் பழகிய போது அன்பின் ஆழத்தை எமக்குணர்த்தினாய். நீ எங்களை விட்டுப் பிரிந்தபோது தான் மரணத்தின் கொடுமை எமக்குப் புரிந்தது உடலால் எம்மை விட்டு பிரிந்து மாதங்கள் ஆறு ஆனாலும் ஆறு உணர்வால் எங்கள் உள்ளங்களில் என்றும் வாழும் நண்பனே உனது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

1ஆம் வருட உயிரியல் விஞ்ஞானம் மாணவர்கள்
யாழ். பல்கலைக்கழகம்.
[2311]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி. 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 7-04-1988 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Printed and Published by New Uthayan Publications (Pvt) Ltd. 292/2, Navalar Road, Jaffna on Thursday, 7th April 1988.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org